மூன்றாவது ஆண்டு

12

ISSN 2792-1050

# வெண்ணிலா

காலாண்டிதழ்.

QUARTERLY.

வெண்ணிலா - கவிதை மஞ்சரி.

VENNILA - Poetry Inflorescence.



மகாத்மா காந்தி



கலாபூஷணம்
மருதூர் ஜமால்தீன்



எழுத்தாளர், கவிஞர்
க. நவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ்: 12 - ஜனவரி 2024 - விலை: ரூபா. 100/=



# Jesa Grafix

Graphic Designing & Printing

*No. 289, Main Street, Maruthamunai*

**PHOTOCOPY**
**TYPESETTING**
**GRAPHIC DESIGNING**
**OFFSET PRINTING, LAMINATING**
**BINDING, STATIONARY**
**PHONE CARDS**
**RELOADS**
**&**
**MUCH MORE SERVICES**
**at Cheapest rates.**

# 075 656 9393

**jesagrafix24@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா

வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.

காலாண்டிதழ் ISSN 2792 - 1050

மூன்றாவது ஆண்டு - இதழ்: 12 - ஜனவரி 2024.


வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.


**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்**
kavignarsagaffar@gmail.com

**முகவரி:**
**378/2, ஸம் ஸம் வீதி,**
**மருதமுனை - 03 # 32314,**
**இலங்கை.**

**மின்னஞ்சல்:**
vennilakavithaimanjari@gmail.com

**தொடர்பு** : 077 6968697
**வட்ஸ்அப்** : 077 6968671



**Digital Printing:**
S. A. Jezeem, Jesa Grafix,
Main Street, Maruthamunai.

**Information Technology:**
A. G. Afraan Muhammed
(University of Ruhuna.)

**Page Layout & Cover Design:**
S. A. Abdul Gaffar DICP, DIHE & DIEC

**Published by:**
Digital Information System (DIS)
Contact: 07 5858 5656

**அட்டையை அலங்கரிப்போர்:**
மகாத்மா காந்தி
கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன்
எழுத்தாளர் க. நவம்

**அட்டை பின்புலம்:**
காசா அவலம்
(நிழற்படம் - நன்றி: இணையம்.)


## உள்ளே...


**முகநூல் பதிவு: (11)**
- எழுத்தாளர் சிராஜ் மஷ்ஹூர்

**இரங்கல்: (12,14,15)**
- கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்
- பேராசிரியர் செ. யோகராசா
- பலஸ்தீன பெண்கவி நதா

**நூல் நயம்: (16)**
- மூன் கபூரின் வேரினிடை
  - மருதமுனை ஹஸன்

**சிறப்புக் கட்டுரை: (18)**
- நல்லாசான் எங்கள் நவம்
  - மருதமுனை ஹஸன்

**சிறப்புக் கவிதை: (23)**
- க. நவம்

**கட்டுரைகள்: (24, 26, 30)**
- கம்பளை ஆய்ஷ்
- கிண்ணியா சபீனா
- Dr. ஜலீலா முஸம்மில்

**தடம்பதித்த மூத்த கவிஞர்: (29)**
- கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன்

**மஞ்சரி கவிதைகள்: (37)**
- அபூ முஜாஹித்
- கிண்ணியா சபீனா
- ஏ. எம். களஸ்புள்ளா
- ஷிபானா அஸீம்
- காரையன் கதன்
- முகமட் றாபி
- தியத்தலாவ எச். எப். ரிஸ்னா
- வெலிகம ரிம்ஸா முஹம்மத்
- ஷெண்பகச்சோலையாள் ஆய்ஷ்
- இமையி
- அய்ஷெத்அப்சத்
- பெரியநீலாவணையூர் த. நடேஸ்
- எம். ஏ. மாஹிறா (ஹில்மா)
- பாத்திமா மிபாஷா (பஸ்னா)
- ஒலுவில் நழீம் ஹனீபா

**படித்தவற்றில் பிடித்தவை: (57)**
- ஜமீல்
- ஹு‌மைரா அல் அமீன்
- மனுஷி
- மா. காளிதாஸ்
- எழுகவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன் மண்ணில் மானிடம் என்பது புல்லோ...?

'**நான்** பலஸ்தீன் பிரச்சினைகள் பற்றிய அறிவை எங்கிருந்து பெறுவது?' என்று வாசகன் சில வேளை வினவலாம். பல இஸ்லாமிய நூலகங்களில் பலஸ்தீன் பற்றிய ஆய்வு நூல்களும் மூலாதார நூல்களும் உள்ளன. மேலும் வீடியோ, ஓடியோக்களிலும் இணையத்தளங்களிலும் இதனைச் சுருக்கமாகவும் விரிவாகவும் காணலாம். இந்தப் பிண்ணனியில் வெண்ணிலா சஞ்சிகையின் ஆசிரியத் தலைப்பு வெண்ணிலா வாசர்களிடையே பலஸ்தீன் ஆரம்ப வரலாற்றில் ஒரு சிறு பகுதியைத் தெளிவுபடுத்த முனைகின்றது. மானிடம் துடி துடிக்க, பதை பதைக்க நவீன ஆயுதங்களுக்கு இரையாகுவதை ஆற்றொணாத் துயராகக் கொண்டு முன்வைக்கப்படுகின்றது. அத்தோடு ஒரு புறம் உலகம் ஏற்றுக்கொண்ட அஹிம்சாவாதி மகாத்மா காந்தி இற்றைக்கு (2023) 85 வருடங்களுக்கு முன்னர் அதாவது 26-11-1938இல் ஹரிஜன் மக்களுக்கு வழங்கிய செவ்வியில் பலஸ்தீன் விவகாரம் பற்றிக் கூறிய அவரது தீர்க்கதரிசனக் கருத்துக்களின் ஓரிரு அம்சங்களை வெளிக் கொண்டுவரும் நோக்கிலும் எமது இச் சிறு குறிப்பு எழுதப்படுகின்றது. மறுபுறம் துயர் தோய்ந்த இந்தத் துன்பியல் நிகழ்வுகளின் எதிரொலியாக இது இந்த இதழில் எழுதப்படாவிட்டால் நான் ஒரு முஸ்லிமாக இருக்க முடியாது எனவும் நினைக்கிறேன். பலஸ்தீன் மக்களுக்காக உலகளவில் மத வேறுபாடற்று மலையளவு கவிதைகள் யாக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தேடிப் படித்தால் மானிடம் என்பது புல்லோ? என நினைக்கத் தோன்றும்.

உலகில் எந்த நாட்டுக்கும் இல்லாததுபோல் தன் இனப் பெயரை நாட்டின் பெயராகச் சூட்டித் தாம் ஓர் இனவாத சமூகம் என உலகுக்குத் தன்னை அறிமுகப்படுத்தியுள்ள இஸ்ரேல் மும்முரமான முறையில் 1917 ஆம் ஆண்டிலிருந்து ஓர் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றமை உலகறிந்த விடயம். சிலுவைப் போரின்போதே முஸ்லிம்களிடமிருந்து பைத்துல் முகத்தஸும் பலஸ்தீனும் பிரிக்கப்பட்டது. ஹிஜ்ரி 491 இல் - அதாவது கி.பி. 1097 இல் முதலாவது சிலுவைப் போர் நடைபெற்றது. கி.பி. 1099இல் கிறிஸ்தவர்களால் வெற்றிகொள்ளப்பட்டன. 90 ஆண்டுகள் அவர்கள் கைகளிலிருந்தன. 20-10-1187இல் சுல்தான் ஸலாஹுத்தீன் அவர்களால் இரண்டுமே மீட்கப்பட்டன. இது மூன்றாவது சிலுவைப் போர் (1190 - 1197) ஆரம்பமாவதற்கு முன்னர் நடந்தேறியது.

முஸ்லிம்களின் வேத நூலும் என்றுமே எவராலும் மாற்றமுடியாத வகையில் அருளப்பட்டதுமான அல்-குர்ஆனில் இருந்தே அல்-அக்ஸா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசலின் முக்கியத்துவத்தை உலகம் உற்று நோக்கத் தொடங்கியது. சுமார் 14½ நூற்றாண்டுகளைக்கொண்ட இஸ்லாமிய வரலாறு 'குத்ஸ்' உடன் தொடர்பானது. இந்த நகரத்துக்கு முஸ்லிம்கள்தான் 'குத்ஸ்' என்றும் 'பைத்துல் முகத்தஸ்' என்றும் 'அல்ஹரமுல் குத்ஸ்' என்றும் 'அல்குத்ஸ் -அஷ்ஷரீப்' என்றும் பெயரிட்டனர். இஸ்லாமிய அறிவுப் பாங்கு, இஸ்லாமிய மார்க்கப் பிரஞை, இஸ்லாமிய கலாசாரம் குத்ஸ் பெறும் புனிதத்துவத்தை உணர்த்து முகமாகவே இத்தகைய பெயர்களிடப்பட்டன. ஆயிரம் சதுர மீற்றர் நிலப்பரப்பைக் கொண்டதே குத்ஸ் பகுதியாகும்.

குத்ஸ், தக்தீஸ், முகத்தஸ், குத்தூஸ் என்ற சொற்பிரயோகங்கள் பத்துத் தடவைகள் அல்-குர்ஆனில் வந்துள்ளன. பலஸ்தீன அரபுகளின் முன்னோர்களான 'யபூசியர்' என்போர் கி.மு. 4000 வருடங்களுக்கு முன்னரே குத்ஸ் நகரை நிர்மாணித்தனர்.

பிரித்தானிய அரச ஆய்வுக்குழு "யூதர்கள் ஹாயித் 'அல் முப்தி' என அழைக்கும் பகுதி உண்மையில் ஹாயித் 'அல் புராக்' ஆகும். அது மஸ்ஜிதுல் அக்ஸாவின் ஒரு பகுதியாகும். இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மி'.ராஜ் (விண்ணுலக யாத்திரை) செய்ய ஆரம்பமான இடமாகும். சுலைமான் (அலை) அவர்கள் நிர்மாணித்த வணக்கத்தலத்தோடு அதற்கு எந்தத் தொடர்பும் இல்லை" என 1929ஆம் ஆண்டு பிரித்தானிய ஆய்வுக்குழு தீர்மானித்து அறிவித்தது.

பலஸ்தீன் பூமி பற்றி அல்-குர்ஆனில் ஆறு முறைகள் எடுத்தாளப்பட்டுள்ளன. சூரத்துல் அன்பியா - 71 இல் (நபிமார்கள்) 'அவரையும் லூத்தையும் நாம் அகிலத்தாருக்குப் பாக்கியமாக ஆக்கிய பூமியில் காப்பாற்றினோம்.' எனக் குறிப்பிடப்படுகின்றது. ஏக இறைக் கொள்கையின் தந்தை இப்றாஹீம் (அலை) அவர்களும் லூத் (அலை) அவர்களும் ஈராக்கிலேயே வாழ்ந்தனர். இறை தூதை மக்களிடையே எத்திவைக்கப் போராடியபோது எதிர்ப்புக்கள் கிளம்பியதால் நாட்டைவிட்டு வெளியேறும் (விலகிக்கொள்ளல்) ஹிஜ்ரத் செய்யும் நிலைக்கு இப்றாஹீம் (அலை) தள்ளப்பட்டார்கள். தம்மை ஏற்றுக்கொண்டவர்களுடன் சேர்ந்து (அதில் லூத் (அலை) அவர்களும் இருந்தார்கள்.) நாட்டை விட்டு விலகினார்கள். அல்-குர்ஆனில் சூறா அல் - அன் கபூத் (சிலந்தி) - 26 ஆம் வசனம் உறுதிப்படுத்துகின்றது. அதன்படி இப்றாஹீம் (அலை) பைத்துல் முகத்தஸ் பகுதியிலும் லூத் (அலை) கிழக்குப் பகுதியிலும் தங்கினார்கள். அப்பிரதேசங்களுக்கு லூத் (அலை) நபியாக அனுப்பப்பட்டிருந்தார்கள். இக் கருத்தையே மேற்காட்டிய அல்-குர்ஆன் வசனம் வெளிப்படுத்தியுள்ளது.

முஸ்லிம்களின் கரங்களில் இப் பூமி இருக்கும் போது அப் பூமியின் வளங்கள் உலகத்திலுள்ள அனைவருக்கும் நன்மை பயப்பதாகவே அமையும். அல்-குர்ஆன் 'பரக்கத்' - தூய விருத்தியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமும் கொண்டதாக இதனைக் கூறுகின்றது. பலஸ்தீன் மண்ணை விளக்கும்போது 'அர்ழ் முகத்தஸத்' புனிதமான பூமி என்பதுவே அதுவாகும். "என் சமூகத்தினரே! அல்லாஹ் உங்களுக்கு விதித்த தூய்மையான இப் பூமியில் நுழையுங்கள்! புறங்காட்டி ஓடாதீர்கள்" அல்-மாயிதா (உணவுத் தட்டு) என்ற சூறாவில் 21ஆவது வசனம். இந்த வசனம் மூஸா (அலை) அவர்கள் தமது சமூகத்தை பலஸ்தீனில் நுழையுமாறு சொன்ன சம்பவத்தைக் குறிக்கிறது. அல்லாஹ்வின் திரு நாமங்களில் ஒன்றாகவும் குத்தூஸ் (மிகப் புனிதமானவன்) இருப்பதால் இந்தப் பின்னணியில் பலஸ்தீன் பூமிக்கு இச் சொல் பிரயோகிக்கப்படுவதால் இதன் தாற்பரியத்தை எம்மால் உணர்ந்து கொள்ள முடியும். இப்றாஹீம், இஸ்ஹாக், ய∴கூப், யூஸுப், லூத், தாவூத், சுலைமான், ஸகரியா, யஹ்யா, ஈஸா (அலை) போன்ற பல நபிமார்கள் அங்கு வாழ்ந்துள்ளார்கள். முஸ்லிம்கள் தினமும் அல்-குர்ஆனை வாசிப்பதால் அதனூடாக அப் பூமிக்கும் தமக்குமிடையேயுள்ள நெருக்கத்தைக் காண்கின்றனர்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களது வாழ்வில் இடம்பெற்ற மிகப் பிரதானமான விண்ணுலக யாத்திரை (மி∴ராஜ்) குத்ஸிலிருந்து ஆரம்பித்தே பூரணமாகின்றது. இதுவே வரலாற்றுத் திருப்புமுனையாகும். குத்ஸிலிருந்தே நபிமார்கள் அனைவருக்கும் இமாமாக நின்று தொழுவித்தமையால் பைத்துல் முகத்திஸின் பொறுப்பு இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் செல்வதையே உணர்த்தும். இதனால்தான் உலகில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் இப்பூமியுடன் தொடர்புபடுத்தப்படுகிறார்கள். "எனது சமூகத்தின் ஒரு பிரிவினர் தமது எதிரிகளை அடக்கியவர்களாக இறைகட்டளை வரும்வரை சத்தியத்தில் நிலைத்து நிற்பர்." என்று நபியவர்கள் கூறியபோது, இறைதூதரே அவர்கள் யார்? என வினவப்பட்டபோது "அவர்கள்தான் பைத்துல் முகத்திஸிலும் அதனைச் சூழவும் வாழ்பவர்களாவர்." என இறைதூதர் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். ஆதாரம்: முஸ்னத் இமாம் அஹ்மத் - அறிவிப்பவர் அபூ உமாமா (ரழி).

இந்த அறிவிப்பு வருங்காலத்தில் பலஸ்தீனும் அதனைச் சூழ உள்ள பிரதேசங்களும் ஒரு போராட்ட பூமியாக அமையும் எனவும் அதில் வாழ்பவர்களும் அதன் போராட்ட நிலங்களில் தரிப்போரும் ஜிஹாதில் இருக்கிறார்கள் என்பதை இறைதூதர் (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் தமது தோழர்களுக்கு விளக்கியுள்ளார்கள். அதுவே தற்போது நடந்துகொண்டிருக்கின்றது. பலஸ்தீன் ஷாமின் ஒரு பகுதி என்பதால் 'ஷாமுக்கு நல்வாழ்வுள்ளது' என்பதை பெருமானார் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். பலஸ்தீன் பூமி முழு உலகிலும் வாழும் முஸ்லிம்களோடும் தொடர்புபட்டது. பலஸ்தீன் போராட்டம் பலஸ்தீன் மக்களோடும் அரபு மக்களோடும் மட்டும் வரையறை செய்யப்படவில்லை, முழு உலக முஸ்லிம்களுடனும் தொடர்புடையதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலோ என்னவோ, அஹிம்சாவாதியான மகாத்மா காந்தி "யூதர்கள் மேற்கத்திய உலகின் ஒதுக்கப்பட்டவர்களாகவும் வெறுத்தொதுக்கப்படலாம், அல்லது செல்லப் பிள்ளைகளாகச் சீராட்டப்படலாம். இரண்டுமே யூதர்கள் கையிலிருக்கிறது" என்று கூறியுள்ளார். சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானமே யூதர்களுக்கு எதிராக இருப்பதும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உடைய சமீபத்தைய தேர்தல் பிரச்சார வசனங்களும் இஸ்ரேலைக் குறிவைப்பதாக அமைந்துள்ளது.

மேலும், மகாத்மா காந்தி கூறுகையில் "யூதர்களின் நீதிக்கு முரணான நடத்தையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. யூதர்களுக்கு ஒரு தேசிய இல்லம் (தனிநாடு) வேண்டும் என்கின்ற முழக்கத்தை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. அவர்கள் இதற்கான அங்கீகாரத்தை பைபிளில் காட்டுகிறார்கள். எங்கு பிறந்தார்களோ எங்கு சம்பாதித்துப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்களோ அந்தந்த நாடுகளைத் தமது சொந்த நாடாக அவர்கள் ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது? உலகெங்கும் உள்ள எல்லா நாட்டு மக்களும் இப்படித்தானே நடந்துகொள்கிறார்கள்...! ஆங்கிலேயருக்கு இங்கிலாந்து எப்படிச் சொந்தமோ, பிரெஞ்சுக்காரர்களுக்குப் பிரான்ஸ் எப்படிச் சொந்தமோ அப்படித்தான் பலஸ்தீனும் அரபுகளுக்கே சொந்தம். அரபுகள் மீது யூதர்களைத் திணிப்பது தவறானதும், மனித விரோதமானதுமாகும். இன்று பலஸ்தீனில் என்னவெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது...? அவற்றில் யாதொன்றையும் எந்தவொரு தார்மீக நெறிமுறையின் படியும் நியாயப்படுத்தவே முடியாது. அங்கு நடத்தப்பட்டுவரும் அட்டூழியங்களை எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. பலஸ்தீனம் முழுவதையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ யூதர்களுக்குத் தந்துவிட்டு கண்ணியமிக்க அரபுகளை அவமானப்படுத்துவது மனிதகுலத்துக்கு விரோதமான குற்றமாகவே கருதப்படும்..."

"பலஸ்தீனில் இருக்கிற யூதர்களுக்கு சில வார்த்தைகள். அவர்கள் தவறான வழியில் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. பைபிளில் சித்தரிக்கப்பட்டுள்ள பலஸ்தீனுக்குப் புவியியல் சான்றோ வடிவமோ இல்லை. அது அவர்களின் இதயங்களில் இருக்கிறது. இப்போதைய பலஸ்தீன்தான் அவர்களது சொந்த நாடு என அவர்கள் நம்பினால் பிரிட்டிஷ் துப்பாக்கிகளின் நிழலில் அதற்குள் நுழைவது தவறானதாகும். துப்பாக்கித் தோட்டாக்களுடனோ, வெடி குண்டுகளுடனோ ஒரு மதச் சடங்கைச் செய்ய முடியாது - கூடாது. அரபுகளின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொண்டு அவர்களின் அனுமதியுடன் வேண்டுமானால் பலஸ்தீனில் குடியேறட்டும். அவர்கள் முதலில் அரபுகளின் இதயங்களை வெல்லட்டும். யூத இதயத்தை ஆளுகின்ற இறைவன்தானே அரபு இதயத்தையும் ஆளுகின்றான்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...அரபுகள் மீதான கொடுமைகளும் அராஜகங்களும் எல்லை மீறிப்போன நிலையில் அரபுகளின் கிளர்ச்சியை விமர்சித்து ஒன்றும் சொல்லமுடியாது."

"இறைவனால் வெறுக்கப்பட்ட - காட்டுமிராண்டித்தனமான முறையில் நடந்துகொள்வதைத் தவிர்த்து இறைவனால் தேர்ந் தெடுக்கப்பட்ட இனத்தவர்களாக அமைதியான வழிமுறைகள் மேற்கொண்டு உலகின் மரியாதையையும் கவனத்தையும் ஈர்க்கலாம். அவர்களது பங்களிப்புக்களின் மணிமகுடமாக வன்முறையற்ற செயலையும் அவர்கள் சேர்த்துக்கொள்ளலாம். யூதர்கள் தவறான வழியில் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை."

இற்றைக்குச் சுமார் 85 வருடங்களுக்கு முன்னரே மகாத்மா காந்தி கூறிய கூற்றுக்கள் எந்தளவு தூரம் வலிமைமிக்கதும், தீர்க்கதரிசனமான கூற்றுக்கள் என்பதை இன்று உலகமே ஒப்புக்கொண்டுள்ளது.

இந்திய தேசத்தந்தை மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்படுவதற்கு ஒன்பது வருடங்களுக்கு முன்னர் அவர் கூறிய கருத்து அவர் மறைந்து 75 வருடங்களின் பின்பும் பலஸ்தீன் விவகாரத்தில் உயிர்வாழ்வதைக் காண்கின்றோம். இந்தியாவில் இந்து - முஸ்லிம் கலவரத்தின்போது "முஸ்லிம்களுடனும் அன்புடன் நடந்துகொள்ளுங்கள்" என்று கூறியதனாலேயே அவர் சுட்டுக்கொல்லப்பட்டமை தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயம்.

மகாத்மா காந்திக்கு 26 வயதாக இருக்கும்போதே அதாவது 1895 இல் தியோடர் ஹெசில் என்பவரால் ஆறு யூதர்களைக்கொண்டு ஸியோனிச இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டது. உலகம் தழுவிய ரீதியில் வளரத்தொடங்கியது. இதனை நன்கு அவதானித்த மகாத்மா காந்தி நீண்ட மௌனத்தின் பின்னர் தமது 69 வயதிலேயே ஸியோனிசத்தைக் கண்டித்தார். இஸ்லாமியப் பேரரசின் கடைசிக் கலீபாவான சுல்தான் அப்துல் ஹமீத் II (ரஹ்) பலஸ்தீனின் ஒரு பகுதியை ஸியோனிசவாதிகள் வாங்க முற்பட்டபோது "பலஸ்தீனில் எள்முனை அளவு நிலத்தைக்கூட நான் விட்டுத்தரமாட்டேன். இது எனது சொத்தல்ல. உலகம் முழுவதும் பரந்து வாழும் முஸ்லிம்களின் சொத்து." எனப் பதிலளித்தார். சுல்தான் அப்துல் ஹமீத் சொன்ன பதிலை தியோடர் ஹெசில் தனது நாட்குறிப்பேட்டில் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

"He (Sulthan Abdul Hameed) would prefer his body to be disserted than to give away a part of the Muslims' trust."

"அவர் (சுல்தான் அப்துல் ஹமீத்) முஸ்லிம்களின் அமானிதமான பலஸ்தீனில் ஒரு சிறு பகுதியை விட்டுத் தருவதைவிட தனது உடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட துண்டமாக ஆக்கப்படுவதையே தேர்ந்தெடுக்கொண்டார்."

இந்தக் கூற்றினால் நயவஞ்சகத் தன்மையைக் கையாண்டு சுல்தான் அப்துல் ஹமீத் II அவர்களின் ஆட்சியைக் கவிழ்த்த வரலாறு விரிவஞ்சி இங்கு தவிர்க்கப்படுகின்றது.

மஸ்ஜிதுல் அக்ஸா, மஸ்ஜிதே உமர் (Dome of the Rock) ஆகியவைகள் அடங்கிய மொத்த வளாகமே பைத்துல் முகத்தஸ் ஆகும். யூதர்கள் மஸ்ஜித் அல் அக்ஸாவை 'Temple mount' என்றே குறிப்பிடுகின்றனர். இந்த யூதர்களின் சதித்திட்டத்தை முஸ்லிம்கள் சரிவர உணர்ந்து Temple mount என்ற பிரயோகத்தை தவிர்க்கவேண்டும். Dome of the Rock மட்டும் பைத்துல் முகத்தஸ் அல்ல.

இஸ்லாமிய கவிஞர்கள் குத்ஸ் பற்றி இதுவரை எழுதியுள்ள கவிதைகளைச் சேர்த்தாலே அது எத்தனையோ பாகங்களைத் தாண்டிவிடும். அது தொடர்பானவர்கள் தமது கவிதைகளில் எப்போதுமே சத்தியத்துக்கும் அசத்தியத்துக்குமிடையிலான போராட்டங்களைப் பாடுவார்கள். ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுதலை பெறத் துடிக்கும் உணர்வலைகள் அக் கவிதைகளில் தொனிக்கும்.

வரலாற்றில் யூதர்கள் குத்ஸில் வாழவும் வணங்கவும் அவர்களுக்கு அனுமதி வழங்கியவர்களும் முஸ்லிம்களே. அதற்கு முன்னர் அங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்கள் எந்த யூதனும் வாழக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தனர்.

"எமக்கு எதிராக யார் என்ன சொன்னாலும் நாம் அவற்றைப் பொருட்படுத்தப் போவதில்லை" என்கின்ற திமிர்கொண்ட தொனியில் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானிய நாடுகளின் பலத்தைப் பிரயோகித்து நடத்துகின்ற கோழைத்தனமான போரில் இஸ்ரேல் தமது குறிக்கோளை அடையவில்லை. பலஸ்தீன் தேசம் இன்னும் அவர்களிடம் சரணாகதி அடையவில்லை. இஸ்ரேல் - பலஸ்தீன் பிரச்சினைக்குப் பிள்ளையார் சுழி போடும் அமெரிக்காவின் முயற்சிகள் நிற்கப்போவதுமில்லை. பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் அமெரிக்காவின் இரட்டை வேடத்தை உலகமே அறியும்.

வெண்ணிலா பலஸ்தீன் மண்ணுக்காகக் குரல்கொடுக்கும் வரலாற்றுப் பதிவைச் செய்துள்ளது.

- ஆசிரியர்.

**அடுத்த இதழ்:**

**இதழ் 13: ஏப்ரல் 2024 முதலாவது வாரம் வெளிவரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா கவிதை மஞ்சரிக்கு சிறந்த சஞ்சிகைக்கான விருது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால், இலக்கியப் படைப்புகளுக்கான விருது வழங்கலின் பொருட்டு 2022ஆம் ஆண்டு பிரசுரமான சிறந்த நூல்கள், சஞ்சிகைகள், குறுந்திரைப்பட ஆக்கங்களைத் தேர்வு செய்யும் வண்ணம், கிழக்கு மாகாண எழுத்தாளர்களுக்கும், பதிப்பாளர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் தமது படைப்புக்களைச் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 2022ஆம் ஆண்டு வெளிவந்த இலக்கியச் சஞ்சிகைகளில் **"கிழக்கு மாகாண சிறந்த நூல் விருது - 2023" வெண்ணிலா** கவிதை மஞ்சரிக்குக் கிடைத்துள்ளது.

முதலில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. H.E.M.W.G. திஸநாயக்கா அவர்களுக்கும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திரு. சரவணமுத்து நவநீதன் அவர்களுக்கும், அனைத்து கலாசார உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் நூல் தெரிவுக் குழுவிற்கும் **வெண்ணிலா** தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறது.

அடுத்து, இவ் விருதானது **வெண்ணிலா**வின் வளர்ச்சிக்கு உறுதுணை நிற்கும் ஆலோசகர்கள், கவிஞர்கள், கட்டுரையாளர்கள், எழுத்தாளர்கள், சந்தாத்தாரர்கள், வாசகர்கள், விமர்சகர்கள், ஊடகவியலாளர்கள், விளம்பர அனுசரணையாளர்கள், அச்சுப் பதிப்பகத்தினர், தொழிநுட்ப உதவியாளர்கள், வெளியீட்டு நிறுவனம், விற்பனைப் பிரதிநிதிகள், அரச மற்றும் தனியார் ஊடகங்கள் போன்ற அனைத்துத் தரப்பினருக்கும் கிடைத்த கௌரவமாகவே கருதப்படுகிறது.

**- இதழாசிரியர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் பதிவு

## சிந்தனைத் தேக்கம்.

- சிராஜ் மஷ்ஹூர் -

கவிதை எல்லோருக்கும் முழுமையாகப் புரிவதில்லை. இருண்மையும் குறியீடுகளும் சேரும்போது, அதைப் புரிந்து கொள்வதற்கு சற்று உழைப்பும் சிந்திப்பும் தேவை. பலர் இதற்குத் தயாரில்லை. அதனால் கவிதைக்கான பார்வையாளர்கள் குறைந்து கொண்டு செல்கிறார்கள்.

சிறுகதை, நாவல்கள் போன்ற புனைகதை வடிவங்களை வாசிப்போர் ஒப்பீட்டளவில் சற்று அதிகம். எல்லோரும் தத்தமது வாழ்க்கை அனுபவங்களை, அந்தப் பிரதிகளோடு பொருத்திப் பார்க்கின்றனர். இது ஓரளவு விரிந்த வாசகர் வட்டத்தை உருவாக்குகிறது.

கட்டுரை அறிவு சார்ந்த விடயம். அதைத் தேடிப் படிப்போர் குறைவு. அபுனைவுகள் அல்லது புனைகதை சாரா எழுத்துகள் (Non Fiction) குறித்த தேடலும் இங்கு குறைவுதான்.

இன்னும் ஆழ்ந்து நோக்கினால், ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிப்போர் எப்போதும் மிகச் சிலரே.

இங்கு அறிவுத் தேடலின் பரப்பு எப்போதும் குறுகியே நிற்கிறது.

அறிவுக்கும் உணர்ச்சிக்கும் இடையிலான போரில், அறிவு தோற்றுக் கொண்டே இருக்கிறது.

சீரியஸான வாசிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. வாசிப்பை வளர்த்து விடுவதற்கான எந்த முனைப்பும் நமது கல்வித் திட்டத்தில் இல்லை. பொதுத் தளத்திலும் வாசிப்பை நேசிப்போர் குறைந்து கொண்டு செல்வதையே அவதானிக்க முடிகிறது.

சிந்தனைச் சோம்பேறிகள் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால், ஒட்டுமொத்த மக்கள் திரளின் கூட்டு அறிவு மட்டம். வீழ்ச்சியடைந்து கொண்டே இருக்கிறது.

இந்த சிந்தனைத் தேக்கம், சமூக-அரசியல்-பண்பாட்டுத் தளத்தில் துல்லியமாகப் புலப்படுகிறது.

(நேற்றைய மாலை உரையாடலின் போது ஒரு நண்பரோடு பேசிக் கொண்டிருந்த விடயங்கள் இவை.)

**-இலக்கிய செயற்பாட்டாளர், எழுத்தாளர் சிராஜ் மஷ்ஹூர்.**

*08-11-2023.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ. காதர்

35 வருடங்களாக கண்ணியமான முறையில் பக்கசார்பின்றி ஊடகப்பணி ஆற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.எம்.எம்.ஏ. காதர் அவர்களின் மறைவுச் செய்தி கிலக்கிலங்கை வாழ் மக்களை பெருங் கவலையில் ஆழ்த்தியது மறுக்கமுடியாததும் மறக்க முடியாததுமான ஓர் உண்மை எனலாம்.

தென்னிந்தியாவைச் சேர்ந்த பத்து முகம்மது ராவுத்தர் பீர்முகம்மது என்பவருக்கும் மருதமுனையைச் சேர்ந்த இஸ்மாலெவ்வை ஆமினா என்பவருக்கும் 1957ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் திகதி பிறந்தவர் பி.எம்.எம்.ஏ. காதர் அவர்கள்.

1979ஆம் ஆண்டு மீராலெவ்வை ஹவ்லத் என்பவரை தனது துணையாக்கிக் கொண்டார். இல்லற வாழ்வில் வறுமையின் போதும் மிக மகிழ்ச்சியாக வாழ்ந்த இவர்களுக்கு ஐந்து பெண்பிள்ளைகளும் ஓர் ஆண் மகனும் உள்ளனர்.

1994ஆம் ஆண்டு கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தில் விற்பனை உதவியாளராக இணைந்து 2005இல் ஓய்வு பெற்றார். பின்னர் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எல். துல்கர் நயீம் (துல்சான்) அவர்களின் ஊடக இணைப்பாளராகப் பணி புரிந்தார்.



கலாபூஷணம் பி. எம். எம். ஏ. காதர்
(1957-2023)

வறுமையின் நிமிர்த்தம் தனது ஆரம்பக் கல்வியை முறையாகக் கற்க முடியாதபோதும் கல்வியின் மீது கொண்ட நாட்டம் சுயமாகக் கல்வி கற்று 1989ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறப்புற சித்தியடைந்தார்.

இதுவரை 600இற்கும் அதிகமான கட்டுரைகளையும் 300இற்கும் மேற்பட்ட கவிதைகளையும் எழுதியுள்ளார். உயிருடன் இருக்கும் போதே அனைத்தையும் மிக விரைவில் புத்தக வடிவமாக்க வேண்டுமென காணும் போதெல்லாம் ஞாபகமூட்டிக் கொள்வார். கனவு நனவாகாமலே எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த 'கிழக்கின் குரல்' 53 கட்டுரைகளும், மெட்ரோ நியூஸ் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த 'விலேஜ் விசிட்' 125 கட்டுரைகளும் அவரது ஆற்றலுக்குப் பறை சாற்றும் ஆவணங்களாகும்.

28-05-2016 சனி காலை 9:00 மணியளவில் மருதமுனை **புதுப் புனைவு இலக்கிய வட்டம்** மருதமுனை மருதூர்க்கனி நூலக கேட்போர் கூடத்தில் **பத்திரிகையாளர் காதருக்கு பாராட்டு விழாவும் தீரா - மை மலர் வெளியீடும்** என்ற தலைப்பில் பாராட்டு விழாவொன்றை கவிஞர் மருதமுனை ஹஸன் அவர்கள் தலைமையில் நடாத்தியது.

இந் நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, சிரேஸ்ட விரிவுரையாளர் ஏ. எம். றியாஸ் அகமட் ஆகியோர் உரையாற்றினர். வரவேற்புரை கவிஞர் ஜமீல் அவர்களினாலும் நன்றியுரை கவிஞர் ஏ. எம். குர்சித் அவர்களினாலும் நிகழ்த்தப்பட்டது. ஊடகவியலாளர் ஏ. எல். எம். சினாஸ் அவர்களினால் நிகழ்ச்சி அழகிய முறையில் தொகுத்து வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் ஏற்புரை வழங்கிய பி.எம்.எம்.ஏ. காதர் அவர்களினால் உரையாற்ற முடியாது தேம்பித் தேம்பி அழுத காட்சி இன்றும் நினைவைவிட்டுப் போகவில்லை. அவ்வளவு மென்மையான மனம் படைத்தவர். மற்றவர்களின் முன்னேற் றத்தில் மகிழ்ச்சி கண்டவர்

மேலும் 'வெண்ணிலா' கவிதை மஞ்சரியின் வளர்ச்சியில் பெரிதும் பங்களிப்புச் செய்தவர். ஒவ்வொரு இதழின் வருகை பற்றியும் ஊடகங்கள் வாயிலாக தெரியப்படுத்தியதுடன் இளம் இலக்கியவாதிகளிடையே அறிமுகமும் செய்து வைத்த கனவான்.

**பெற்ற விருதுகளிற் சில:**

- சிறந்த ஊடகவியலாளர் விருது - 2003 (அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம்.)
- சாகித்ய விருது - 2006 (பிரதேச செயலகம், கல்முனை.)
- சிறந்த பத்திரிகையாளருக்கான சுப்பிரமணிய செட்டியார் தேசிய விருது - 2010 (இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் நடாத்திய போட்டி.)
- சிறந்த செய்தியாளர் விருது - 2010 (இலங்கை தமிழோசை இணைய வானொலி.)
- சாமஸ்ரீ தேசமான்ய விருது - 2011
- சமுர்த்தி கௌரவிப்பு விருது - 2011 (பிரதேச செயலகம், கல்முனை.)
- விசேட கலாச்சார விருது - 2012 (பிரதேச செயலகம், கல்முனை.)
- சூழலியல் செய்தியாளருக்கான தேசிய விருது - 2012 (இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் நடாத்திய போட்டி.)
- சிறந்த ஊடக சேவைக்கான விருது - 2015 (அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம்.)
- கலாபூஷணம் அரச விருது - 2018.

அன்னாரின் மறு வாழ்வு ஈடேற்றம் பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கிறோம்.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெபா கமால் அபு நதா


ஒக்சிஜன் இஸ் நாட் ஃபார் த டெட் ***(Oxygen is Not for the Dead)*** (2017) என்ற பிரபலமான நாவலை எழுதிய கவிஞரும் எழுத்தாளருமான ஹெபா கமால் அபு நதா என்ற பலஸ்தீன பெண் கவி, கடந்த 20-10-2023 வெள்ளிக்கிழமை காசா, கான் யூனிஸில் இஸ்ரேலிய இராணுவத்தால் அவரது வீட்டின் மீது வீசப்பட்ட குண்டுத் தாக்குதலில் தனது 32ஆவது வயதில் பரிதாபமாகக் கொல்லப்பட்டதாக பலஸ்தீனிய கலாச்சார அமைச்சகம் மிக வேதனையுடன் அறிவித்தது.

பலஸ்தீன மக்களின் அன்றாட அவலங்களைத் தன் கவிதைகள் மூலம் வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியவர். அநாதைப் பிள்ளைகளின் மேம்பாட்டிற் காகத் தன்னையே அற்பணித்த ஊட்டச்சத்து நிபுணர் (Nutritionist).

24-06-1991 சவூதி அரேபியா, மக்காவில் பிறந்த நதா, காசா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் உயிர்-வேதியியல் (Bio-chemistry) படித்து தொடர்ந்து மருத்துவ ஊட்டச்சத்தில் முதுகலைப் பட்டம் (Master's in clinical nutrition) பெற்றவர்.

2017ல், இவரது **ஒக்சிஜன் இஸ் நாட் ஃபார் த டெட்** என்ற பிரபல நாவல் அரபுலக படைப்பாற்றலுக்கான ஷார்ஜா விருதின் இரண்டாவது இடத்தைத் தட்டிக்கொண்டது.

அன்னாரின் மறு வாழ்வு ஈடேற்றம் பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கிறோம்.



கவிதாயினி ஹெபா கமால் அபு நதா
(1991-2023)

ஹெபா கமால் அபு நதா தனது X (@HebaAbuNada)வலைத்தளத்தில் 09-10-2023 அன்று அதிகாலை 01:06 மணியளவில் அரபியில் இறுதியாகப் பதிவிட்ட அவரது வரிகளின் தமிழாக்கம்:

**நகரின் இரவு**
**ஏவுகணைகளின்**
**ஒளியைத் தவிர இருண்டது,**
**குண்டுவீச்சின்**
**சத்தத்தைத் தவிர அமைதியானது,**
**பிராத்தனையின்**
**உறுதியைத் தவிர பயமுறுத்துகிறது,**
**தியாயிகளின்**
**ஒளியைத் தவிர கருமையாகிறது -**
**இனிய இரவு.**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுநிலை பேராசிரியர்

# செ. யோகராசா

1949இல் யாழ் வடமராச்சி கரணவாய் கிராமத்தில் செல்லையா -இலட்சுமி தம்பதியினருக்கு பிறந்து, தலவாக்கலையில் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்து, மட்டக்களப்பில் வாழ்ந்து வந்த பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை யாழ் கரணவாய் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றவர். இவர் 1991இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில், மொழித் துறை விரிவுரையாளராக இணைந்து, 2009இல் பேராசிரியராக நியமனம் பெற்று 2014இல் 23 வருட பல்கலைக் கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

1960 தொடக்கம் 1972 வரை 'கருணை யோகன்' என்ற புனை பெயரில் இலக்கிய உலகிற்கு ஒரு கவிஞனாக உருவெடுத்து பின் சிறுகதைகள் பலவற்றைப் படைத்த இவர் பிற்காலத்தில் பல்துறைப் பரிமாணங்களைக் கொண்ட சிறந்ததோர் படைப்பாளியாகவும், ஆற்றல் மிக்க ஆய்வாளராகவும், எல்லோராலும் மதிக்கப்படுகின்ற பண்பாளனாகவும், சிறந்த திறனாய் வாளராகவும் விளங்கினார்.

இதுவரையில் 50க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள், 6 தொகுப்பு, 8 நூல்களைப் படைத்துள்ளார். **குமரன் புத்தக இல்லம்** வெளியிட்ட இவரது **ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்** மற்றும் **ஈழத்து சிறுவர் பாடல் களஞ்சியம்** ஆகிய இரு நூல்களும் அவரது ஆழ்ந்த அறிவிற்கான சான்றுகள்.

பேராசிரியர் அவர்களின் **ஈழத்துத் தமிழ் சிறுகதைக் களஞ்சியம்** என்னும் நூல் இலங்கையில் வெளிவந்த மிகமுக்கிய, மிகச் சிறந்த சிறுகதைகளின் தொகுப்பாக அமைகின்றது. நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்கங்களையும் கொண்ட இக் களஞ்சியம் இலங்கைச் சிறுகதை வரலாற்றில் முக்கிய தடம் பதித்த சிறுகதை ஆசிரியர்கள் பற்றிய ஆவணத் தொகுப்பாகும். இவரது **ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள் - புதிய தரவுகள் - புதிய போக்குகள்** என்ற நூலுக்கு தேசிய சாகித்திய விருது 2007இலும் **பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை** என்ற நூலுக்கு பிரதேச சாகித்திய விருது 2007இலும், **ஈழத்து நாவல் வளர்ச்சியும் வளமும்** என்ற நூலுக்கு பிரதேச சாகித்திய விருது 2008இலும் பேராசிரியர் செ. யோகராசா பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஓய்வுநிலை பேராசிரியர் செ. யோகராசா
(1949-2023)

அன்னாரின் மறைவு இலக்கிய உலகுக்குப் பேரிழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடைய நாமும் பிராத்திப்போமாக.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீன் கபூரின் வேரினிடை

**(டீன் கபூரின் கவிதைகளும்
அவற்றின் ஆங்கில மொழி மாற்றங்களும்)**

**உனது புன்னகையைப் பார்த்தேன்
அது கடல் வெளியில் அலை இடுக்கில்
தவழ்ந்து கரை கடக்க முயற்சித்து
கடல் மணலில் புதையுண்டு போனது.**

**பின்னர் ஒருமுறை கண்டேன்
பேருந்தில் பயணிக்க ஆயத்தமாய் நின்றது
சனத்தோடு சனமாகி நொறுங்கி
வண்டியின் புகையூடே கருகி
வியர்வையில் ஒழுகிக் கரைந்து போனது.**


**மீண்டும் கண்களில் பட்டது
பரிதாபமாய் மலையொன்றில் ஏறி
வனம் முழுக்க கனவோடு அலைந்து
மரமொன்றின் கிளை நடுவே அகப்பட்டுச்
செத்துக் கிடந்தது.**

**புன்னகையை எப்போதும்
உனது உதடுகளில் நான் காணாமலேயே
போகிறேன்.**

டீன் கபூரின் வேரினிடை கவிதைத் தொகுப்பில் 78 ஆம் பக்கப் பாடல் இது.

மீண்டும் மீண்டும் இதனைப் படிக்கின்ற போது ஓர் அவலச் சுவையை மனத்துள் எழுப்புவதாகவே உணர்கிறேன். கடகட வென்று வாசிக்காது ஒரு தென்றல் மிக இலேசாக ஓர் இலையை வருடுவதுபோல வாசிக்கின்ற பொழுது இக் கவிதையில் சுவை இன்னும் (உயருகின்றது) இனிப்பாகின்றது.

ஆரம்பத்தில் இதனைப் படிக்கின்ற வேளை ஓர் அன்புக்குரியவரின் அல்லது அன்புக்குரியவளின் காதல் கவிதை போலத் தெரிகிறது. கவிஞர்




குறிப்பிடும் சந்தர்ப்பங்களைக் கவனிக்கின்ற போது அது கடல்புரம், பேருந்து நிலையம் போன்றவற்றில் இணைகின்ற போது ஒரு வாழ்வின் நடத்தையையும் அது எதிர்கொள்ளும் இடர்கனையும் குறிப்பிடுவது போல தோன்றுகின்றது. எப்படி இருப்பினும் ஒரு தேர்ந்த வாசகன் கலைத்துவப் பண்புகளைக் கொண்டவன் இக் கவிதையை மெல்ல மெல்ல வாசிக்கின்ற போது அது எழுப்பும் உணர்வலைகளை மிகவும் ரசிப்பான் என்பது எனது எண்ணம்.

கணிதம் ஒரு மொழிபோல கவிதையும் ஒரு வேறு மொழி. அதைப் புரிவதற்கும் அதில் ஆழ்ந்து கிடப்பதற்கும் கவிஞனின் பாடு புலத்தையும் கவிஞனின் சூழலையும் வாசகன் புரிய முனைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70 ஆம் பக்கம் "அப்பா" கவிதையை மீண்டும் மீண்டும் வாசிக்கின்ற போது எத்தனையோ அப்பாக்கள் ஞாபகத்தில் வந்து போகின்றனர்.

அவர் சார்ந்த புலத்தை எடுத்துக் காட்டுகின்ற போது அவரின் உணர்வுகள் ஒரு குவியலாகக் கொட்டுவதாகவே உணர்கிறேன். அவர் போன்ற அப்பாக்களின் ஏக்கத்தை "அப்பா" கவிதையில் ஏற்றி அவரின் அப்பாவையும் அதில் குறிப்பிடுகின்றார்.

இத் தொகுப்பில் உள்ள கவிதைகளை ஆற அமர மீண்டும் மீண்டும் வாசிக்கும் போதே டீன் கபூரின் கவிதா உணர்வினையும் அவர் சொல்லும் விடயங்களையும் எண்ண அலைகளையும் ஒரு தேர்ந்த வாசகனால் விளங்கிக் கொள்ள முடியும். அது மட்டுமல்ல ஒரு சாதாரண வாசகனும் தனது இருப்பை நகர்த்தி அப்பால் செல்ல முடியும் என்பதும் எனது எண்ணம்.

"அவரது பெரும்பாலான கவிதைகளின் உள்ளடக்கமும் மொழிதலும் எளிமையானவை அல்ல. குறிப்பாக அவரது கதைப்பாணி சிக்கலானது" இவ்வாறு ஜிஃப்ரி ஹாஸன் வேரினிடை கவிதைத் தொகுப்பில் குறிப்பிட்டிருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

ஒரு கட்டுரையை அல்லது வேறு ஒரு வாசகத்தை மொழிமாற்றம் செய்வது என்பது வேறு. ஆனால் ஒரு கவிதையை கவிஞனின் உணர்வின் உள்ளக் கிடக்கையை, அவன் கொண்ட புலத்தை மொழி மாற்றம் செய்வது மிகக் கடினபணி என்றே கருதுகிறேன்.

குறித்த கவிஞன் வாழும் சூழலையும் தளத்தையும் அத் தளத்தில் வழக்காடும் சொற் பிரயோகத்தையும் உள்வாங்கிக் கொண்டு கவிதையின் நுட்பங்களைத் தெரிந்த, கலையை இரசிக்கின்ற, மேலும் அந்த மொழிகளில் நன்கு பரிச்சயமுள்ள ஒருவராலேயே ஒரு கவிதையை அதன் மூலச் சுவை குன்றாது மிக அண்மைக்குக் கொண்டுவர முடியும் என்பதும் எனது கருத்து மட்டுமல்ல பெரும்பாலோரின் கருத்துமாகும்.

அவ்வாறான பணியை இந்தியாவின் கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், பாடகர் சிறி என். சிறிவத்ஸா அவர்கள் நேர்த்தியாகவே செய்துள்ளார்.

வாழ்வின் பல்வேறு கோணங்களில் நின்று கூவுகின்ற கவிஞர் டீன் கபூர் ஓவியரும் கூட. தனது தனிப்பட்ட வாழ்விலும் யாருக்கும் இன்னல் தராத இனியவர். நல்லதோர் ஆசிரியராக இருந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

இன்னும் இதுபோன்று பல தொகுதிகளைத் தருவதற்கு இயற்கை அவருக்கு இசைந்து கொடுப்பதாக.


**வேரினிடை எழுப்பம் வீசி**
**மணக்கிறது**
**தேரினிடை ஏறித் தெருவில்**
**வருகிறது**
**நாரினிடை கோர்த்த நறுமண**
**வாசனை போல**
**சேருமிடமெல்லாம் சிந்து**
**படிக்கிறது.**

•••

**- மருதமுனை ஹஸன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுத்தாளர் க. நவம்

# நல்லாசான் எங்கள் நவம்.

- மருதமுனை ஹஸன்.

ஓங்கி உயர்ந்த வாட்டசாட்டமான தோற்றம், நேர்த்தியான உடை, மூக்குக் கண்ணாடி, பக்க வகிடெடுத்து ஒரு பக்கமாக வாரப்பட்ட முடி, கருணை மொழி பேசும் சாந்த முகம்.

1973 காலப்பகுதியில் நான் O/L வகுப்பு மாணவனாக இருந்தபோது கல்முனை சாஹிறா கல்லூரியில் உயிரியல் பாடம் கற்பித்த நல்லாசான் க. நவரத்தினம் அவர்கள்.

வடக்குத் தெற்காக அமைந்த கட்டிடத்தில் கரும்பலகை, வெண்கட்டி ஏந்திய விரல்கள் வகுப்பில் எழுந்து நின்று கற்பித்த அந்தப் பொன் வசந்தப் பொழுது இன்னும் விழித்திரையில். பாடம் நடாத்துகின்ற போது இடைக்கிடை அந்தக் கண்ணாடியை விரல்களால் சரி செய்யும் அந்தக் காட்சி இன்னும் விழித்திரையில் விலகாமல் கிடக்கிறது.

மாணவர்களின் பெயர்களை அட்சரம் பிசகாது அப்படியே மென்மையாக விளிக்கின்ற குரல் இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அப்போது கற்பித்த ஆசான்களைக் கண்டு கதைத்து விசாரித்து அவர்கள் பற்றிய விடயங்களை அறிய வேண்டுமென்ற எண்ணம் உதயமாகும் போதெல்லாம் ஆசான் க. நவரத்தினம் அவர்களைத் தேடும் மனம்.

முகநூல் வாயிலாக, ஏறக்குறைய 47 வருடங்களின் பின் அவர்களுடன் கதைக்க வாய்ப்புக் கிடைத்தது. கரப்பந்தாட்டக் குழுவில் நானிருக்கும் அப்போதெடுத்த புகைப்படத்தை அனுப்பி ஆசிரிய மாணவர் உறவை புதுப்பித்துக்கொண்டதில் பெருமகிழ்வடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறப்பு:**

யாழ்ப்பாணம் வடமாராட்சியில் பொலிகண்டி எனும் கிராமத்தில் கந்தையா-சின்னம்மா இணையருக்கு மூன்றாவதாய் பிறந்தவர். இரு மூத்த சகோதரர்கள். மூன்று இளைய சகோதரிகள். அண்மையில் காலமான ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்கள் இவரது மூத்த சகோதரர் ஆவார். ஷியாமளா நவரத்தினம் மனைவி.

**கல்வி:**

ஓர் ஆங்கில ஆசிரியராக தொழிலாற்ற ஆரம்பித்து பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விசேட விஞ்ஞான ஆசிரியராகப் பயிற்சி பெற்றார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அரசறிவியலில் B.A.(Honors) பட்டமும் பின்னர் அங்கு விவசாயப் பொருளியலில் M.Sc. பட்டமும் பெற்றார்.

கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் ஆசிரியராகச் சிறிது காலமும் கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்திச் சபையில் சிறிது காலமும் கடமையாற்றியவர்.

அன்புக்குரிய ஆசான் K. L. அபூபக்கர் லெப்பை அவர்கள் சாஹிறா கல்லூரியில் அதிபராயிருந்து அரசோச்சிய 1973இல் பொன்வசந்த காலத்தில் பல்வேறு திறன்கொண்ட ஓர் ஆசிரியராக ஆசான் க. நவரத்தினம் அவர்கள் வலம் வந்த பொழுதுகள் இன்றும் மணக்கிறது. அப்படிப்பட்ட ஓர் ஆசான் மாணவர்களுக்கு கிடைப்பதென்பது ஓர் அதிஸ்டமே. அந்த வகையில் ஆசிரியர் க. நவரத்தினம் அவர்கள் எனக்கும் உயிரியல் ஆசிரியராகக் கிடைத்ததையிட்டு இப்போதும் மனதிற்குள் பூத்துப்போகிறேன்.


ஒரு விஞ்ஞான ஆசிரியர் என்பதற்கும் மேலாக கல்வி, ஒழுக்கம், கலை இலக்கியம், கட்டுரை, மெய்வல்லுனர், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம். துடுப்பெடுத்தாட்டம், அணி நடை, நாடகம், பாட்டு, பேச்சு, வில்லுப்பாட்டு போன்ற துறைகளிலும் அகில இலங்கை ரீதியாக கல்முனை சாஹிறா அப்போது பிரகாசித்தமையில் பெரும் பங்காற்றியவர் அன்புக்குரிய ஆசான் க. நவரத்தினம் அவர்கள் என்றால் அது மிகையாகாது. அவ்வேளை அதிபராயிருந்த K. L. அபூபக்கர் லெப்பை ஆசிரியரின் வழிநடத்தலும் காரணமாயிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

“சேர், உங்களுக்கு ஒரு மகன் மட்டுந்தானா?” எனக் கேட்டேன். தானும் தன் குடும்பமும் அந்த 1983 ஜூலைக் கலவரத்தில் பட்ட துயர் கதையை சொன்னபோது சோகமானேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது மாதப் பச்சைப் பாலகனாய் தன்னை விட்டுப் பிரிந்த ஒரேயொரு மகனும் மனைவியும் இந்தியாவில் தஞ்சமடைந்தனர். பல்வேறு இன்னல்களுக் கிடையில் மகனின் ஐந்தாவது வயதில் 1986 இல் தாயுடன் கனடா வந்து சந்தித்த கதையைக் கூறியபோது துக்கித்துப்போனேன்.



**கவிஞர்**
**மருதமுனை ஹஸன்**

"கனடாவென்ற பனிவயற்காட்டில் நான் காலடி எடுத்து வைத்தபோதும் தற்போது மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகி விட்டபோதும் அந்நாட்டின் குடியுரிமை கிடைக்கப்பெற்று கால் நூற்றாண்டுக்கு மேலாகி விட்ட போதிலும் எனக்கேயான உளவியல், அரசியல், சமூகவியல், பொருளியல், பண்பாட்டியல் மற்றும் குறிப்பாக எனது சரும நிறம் சார் உயிரணுவியல் காரணமாக வெள்ளையர்களால் அந்நாட்டில் இன்னமும் அந்நியனாகவே பார்க்கப்படுகிறேன்." - அதிபர் K. L. அபூபக்கர் லெப்பை அவர்களுக்கான ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து மனம் சலித்துப் போனேன்.

"அதை விடவும் ஒரு துயர். தான் பிறந்து, தவழ்ந்து, அளைந்து, பிசைந்து வளர்ந்ததனால் தன் சொந்த மண் என நினைத்த இந்த மண்ணை முப்பது வருட அலைந்துழல்வின் பின்னர் வந்துசேர்ந்த போது இங்கும் அதே அந்நியன் என்ற பெயர் தன் நெற்றியில் பச்சை குத்தப்பட்ட பரிதாபத்தை எப்படி எடுத்துரைப்பேன்" என அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டது மனத்தை சற்றுக் குடைகிறது.

**எழுத்துப் பிரவேசம்:**

- சிரித்திரன் சிரிகதைப் போட்டியில் 3ஆம் பரிசு (1965).
- ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலம் - கல்லூரி மாணவர் சிறுகதைப் போட்டியில் 'தாயுள்ளம்' சிறுகதைக்கு 2ஆம் பரிசுக்கான வெள்ளிப் பதக்கம். (1965).
- பிரசுரமான முதல் சிறுகதை 'விரதம்' - தினபதி நாளிதழ் (1966).
- எழுதி, தயாரித்து, நெறிப்படுத்திய 'இவர்கள் பைத்தியங்கள்' என்ற நாடகம் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நாடகப் போட்டியில் முதலிடம் (1973).
- எழுதி, தயாரித்து, நெறிப்படுத்திய 'இந்த தேசத்துக்காக' என்ற நாடகம் கல்வியமைச்சின் அகில இலங்கை நாடகப் போட்டியில் முதலிடத்துக்கான தங்கப் பதக்கம் (1974).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர் க. நவரத்தினம் அவர்களது ஆக்கங்கள் வெளிவந்த சஞ்சிகைகள், நாளிதழ்கள், இணையத்தளங்கள்:**

- தினபதி, சிரித்திரன், மல்லிகை, வீரகேசரி, தினகரன், தினக்குரல், வளர்மதி, ஊற்று, ஜீவநதி, கலைமுகம், ஞானம், கனேடிய, வெளிநாட்டு சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள், தாயகம், தமிழோசை, ஈழநாடு, செந்தாமரை, உலகத் தமிழோசை.

**வெளியிட்ட தொகுப்புகள்:**

- 'உள்ளும் புறமும்' - கனடாவில் முதன் முதல் வெளியிட்ட சிறுகதைத் தொகுதி *(1991)*.
- 'உண்மைகளின் மௌன ஊர்வலங்கள்' - சர்வதேச அரசியல் கட்டுரைகள். கனடாவில் முதல் வெளியிடப்பட்ட தமிழ்க் கட்டுரைத் தொகுப்பு.
- 'பரதேசம் போனவர்கள்' - சிறுகதைத் தொகுதி. *(2017)*.
- 'தடங்களைக் கடந்து செல்லும் காலநதி' - சமூக அரசியல், பண்பாடுகள் கட்டுரைகள் *(2017)*.
- 'நான்காவது பரிமாணம்' கலை இலக்கிய மாத இதழின் ஆசிரியர், வெளியீட்டாளர் *(1991-1993)*
- 'நான்காவது பரிமாணம்' வெளியீடாக இதுவரை வெளியிட்ட நூல்கள் 25. (நாவல், கவிதைத் தொகுதிகள், சிறுகதைத் தொகுதிகள், கட்டுரைத் தொகுதிகள், சுயசரிதை, ஆய்வு நூல், அகராதி என்பன இவற்றுள் அடங்கும்.)

**நாடகங்கள்:**

- நடித்தவை *21*, நெறிப்படுத்தி மேடையேற்றியவை *10*, எழுதிய நாடகப் பிரதிகள் *6*.
- எழுதித் தயாரித்து நெறிப்படுத்தி மொன்றியாலில் மேடையேற்றிய 'இனியொரு விதி செய்வோம்' - கனடாவின் முதலாவது தமிழ் சீரிய நாடகம் *(1986)*.

**நடிகராக:**

- 'சகா' என்ற பெயரில் ஜூலை *2005* கனடாவில் தயாரித்துத் திரையிடப்பட்ட திரைப்படத்தின் முக்கிய நடிகர்.
- 'உறவு' என்ற பெயரில் *2010* இல் கனடாவில் தயாரித்துத் திரையிடப்பட்ட திரைப்படத்தின் முக்கிய நடிகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**மனவெளி கலையாற்றுக் குழுவின் அரங்காடலுக்கென நெறிப்படுத்திய நாடகங்கள்:**

- அவன் அவள் *(2000)*
- ஊர்ப் போக்கு *(2003)*
- கடலிலிருந்து கையளவு மேகம் *(2013)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் 54 ஆங்கிலக் கவிதைகளை மொழிமாற்றம் செய்து 'எனினும் நான் எழுகிறேன்' என்ற பெயரில் 2023 இல் ஒரு அழகிய தொகுப்பை வெளியிட்டுள்ளார். அமெரிக்கக் கண்டம் முதல் அவுஸ்திரேலியா வரை வாழும் மக்களின் போர்ச்சூழல், பலஸ்தீனத்தின் மற்றும் ஏதிலிகளின் ஏக்கம் நிறைந்த வாழ்வு போன்ற இன்னும் எத்தனையோ இன்னல்களைப் படம் பிடித்தவையாக அக்கவிதைகள் அமைந்துள்ளன.

தற்போது கனடாவில் தன் குடும்பத்துடன் வாழ்ந்து வரும் அன்புக்குரிய ஆசான் அவர்கள் கனேடிய அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர். கனடாவில், வெளிநாடுகளிலிருந்து வரும் பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகளை அவர்களது கல்வி, தொழில் அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் தர நிர்ணயம் செய்து தகுந்த வேலைகளுக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் செய்யும் அரச நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். தராதரப் பத்திரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்.

எழுத்தாளர், ஊடகவியலாளர், நாடக திரைப்பட நடிகர், நாடக நெறியாளர், கதை கட்டுரை, கவிதை, விளையாட்டு, ஓவியம், இசை ஆகிய துறைகளில் ஆர்வமும் ஆற்றலுமுடையவர் அன்புக்குரிய ஆசான் க. நவரத்தினம் அவர்கள்.

சவுக்கு மரங்களும் சிறிய மாங்கன்றுகளும் ஏனைய பூஞ்செடிகளும் நிறைந்த பூந்தோட்ட முன்வாசல் கொண்ட சாஹிறா கல்லூரியில் அன்புக்குரிய ஆசிரியர் K. L. அபூபக்கர் லெப்பை அவர்கள் அதிபராக அன்பான ஆசான் க. நவரத்தினம் அவர்கள் உயிரியல் விஞ்ஞான ஆசிரியராக நாம் படிக்கின்ற குறிஞ்சி நிலாக் காலம் மீண்டும் வருமோ? என்று பசுமை நினைவலைகள் மனத்துள் படர்கின்றன.

ஆசான் க. நவரத்தினம் அவர்கள் தன் குடும்பத்துடன் தேகாரோக்கியத்துடன் இன்னும் நன்கு வாழ்ந்து படைப்புலகத்தில் பிரகாசிக்க இயற்கை துணை புரிவதாக.

**பொலிகண்டி ஊரின் பொலிந்த செழுந்தேன்**

**பொலிந்தான் கலையுலகிற் பூத்தான் - சலிக்காது**

**வல்லவனாய் என்றும் வலம்வந்தான் வண்ணமகன்**

**நல்லாசான் எங்கள் நவம்.**


- கவிஞர் மருதமுனை ஹஸன்.

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாந்தம்




போதையேறிய இருளைப்
போர்த்திக் கிடக்கும்
பின் இரவின் வாசனையைக்
காவித் திரியும் காற்றிலும்
கனம் பரவும்

நீள்சதுரச் சாளரத்தின் நிழலாய்
வெகு தொலைவில்
வெள்ளிப் பூவோடு
மின்மினியும்
கண்மினுங்கி
பின்னிரவைத் துரத்திச் செல்லும்

தூங்கா இரவுப் பூங்கா
புதுவித அழகு
ஏங்கும் நிலவு வடிக்கும்
வெள்ளிக் கண்ணீரை
விரும்பிய வரைக்கும்
அள்ளிப்பூசிய அற்புதக் கோலம்

பறவைகள் உறங்கும்
இரவு வந்திறங்கிய
ஏகாந்தப் பொழுதில்
எலியைத் துரத்தும்
பூனையின் உறுமல்
ஒலியின் பெருக்கால்
புலியை நிகர்க்கும்

கள்வர்க்கும் கயவர்க்கும்
கவிஞர்க்கும் காதலர்க்கும்
சுட்டெரிக்கும் சூரியனில் நாட்டமில்லை
காரிருள்தான் அவர்களுக்கு
கள்
இனிமை

அறிவுடை மாந்தரின்
ரகசியக் காதலி
இரவிடை துளிர்க்கும்
கவிதை கற்பனை
எழுதிடக் கோரும்
எண்ணமோ கோடி

உறக்கம் மறுத்துக்
கிறக்கம் சுரக்கும்
இன்னோரிரவின்
இம்சை நிசப்தம்
இதயத் துடிப்பை
இடியெனப் பெருக்கும்

வெற்றிடங்களை இயற்கை
விட்டுவைப்பதில்லையெனும்
விதியைக் கடந்து
கட்டிலின்
ஒருபாதி
வெற்றிடம்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியப் பணி, மிகப் புனிதமானது!

- ஆய்ஷ்.
கம்பளை.

உடன்பிறவா ஆசிரிய சகோதரிகளே! ஆசிரியப் பணி அழகானது. உயிர்களின் உணர்வுகளோடு ஒன்றிப்போனது. பிள்ளைகள் வித்தியாசமான திறமை கொண்ட வைரங்கள். அவற்றைப் பட்டை தீட்டுவோமாக!

தாயைப் பிரிந்து வரும் பிள்ளைகளின் இரண்டாவது தாயாய் தந்தையாய் நாம் மாற வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏராளம். அனுபவங்களோடு பேசுகிறேன். என்னை விட அபரிமிதமான அனுபவங்களை நீங்கள் கண்டும் கேட்டும் இருப்பீர்கள். ஜீரணிக்க முடியா உணர்வுகளோடு பேசுகிறேன். நானும் நீங்களுமாய் கைகோர்ப்போமாக!

பிள்ளைகள் வித்தியாசமான மனநிலை உடையவர்கள். அவர்கள் பல்வேறு மன அழுத்தங்களை மனதில் சுமந்துகொண்டுதான் புத்தகப்பைகளின் பாரங்களையும் சுமந்து நம்மை நாடி வருகிறார்கள். புத்தகங்களையும் தாள்களையும் தண்ணீர்ப் போத்தல்களை விடவும் அவை பாரமானவை. மெதுவாய் பொறுமையோடு அவர்களின் மனம் பாரங்களை இறக்கி நாம் எதிர்பார்க்கும் நடத்தை மாற்றங்களை இலகு படுத்துவோமாக.

பாடசாலையை விருப்புக்குரிய இடமாக மாற்றுதலில் பெற்றோருடன் இணைந்து செயற்படுவோம். கற்கப் போகும் எண்ணக்கருக்களை அவர்களது வேகத்திற் கேற்றவாறு பதிதலைச் சற்று புரிந்து கொள்வோமாக!

நம்மிடம் வரும் தற்கால பிள்ளைகளில் மனநிலை மாற்றம் அதிகம் தேவை.


அதிகமானோரிடம் நாம் இலகுவென எதிர்பார்க்கும் கற்றல் நடத்தை மாற்றங்கள் இரண்டாம் பட்சம். அன்பு காப்பு கணிப்பு அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்தேவை என்பதை உணர்ந்து கொள்வோமாக!

உயிர்களின் உணர்வுகளோடானது நம் உறவு. புரிந்து கொள்வதிலும் பரிந்து போவதிலும் அவர்களுள் நாம் ஊடுருவி அவர்கள் வயதினராக நாம் மாறுதல் மாற்றங்களை நிச்சயமாக உருவாக்கும்.



கல்லூரி வரும் பிள்ளைகள் அனைவரும் ஆரோக்கியமான மனநிலையில் இல்லை. கல்லூரி நுழைவாயில் தாண்டும் போதே வலிகளையும் வரிந்து கட்டிக்கொண்டே சீருடையில் கருகி இறுகிப்போன வெள்ளை உள்ளங்களில் வெறுமைகளோடு நம்மிடம் வருகிறார்கள். எல்லோருமல்ல. ஆனால் அனேகர். வாரி அணைத்துக் கொள்வோமாக!

சிலர் தாயைப் பிரிந்து வரலாம். சிலர் தந்தையைப் பிரிந்து வரலாம். சிலர் பெற்றோரை நிரந்தரமாய்ப் பிரிந்து வரலாம். சிலர் வளர்ப்புத் தாயிடமிருந்து வரலாம். சிலருக்கு தாயும் தந்தையும் இருந்தும் இல்லாமல் இருக்கலாம். உணர்வுகள் உயிரானவை. அன்பால் அனைத்தையும் வெல்வோமாக!

பிள்ளைகள் வெறும் ஜடமல்ல. அவர்களிடம் அபூர்வ திறமைகள் உண்டு. சிறு வயதிலேயே அவர்களின் திறமைகளை இனங்கண்டு அவற்றை வளர்த்து விடுவதில் நூறு வீதம் நம்மால் முடியாவிட்டாலும் உன்னால் முடியும் என்ற தன்னம் பிக்கையை ஊட்டி ஊட்டி ஊக்கப்படுத்துவோமாக.

ஆசிரியர்களால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. சேவை மனப் பாங்கு நம்முள் இருக்குமானால், செய்யும் தொழிலில் ஆர்வம் இருக்குமானால் ஆசிரியர்களை விட சிறந்த உளவியலாளர்கள் உலகில் யாருமில்லை. ஆசிரியப் பணி உன்னதமானது. அத்தனை தலைமைகளுக்கும் கற்றுத் தேர்ந்தவர்களுக்கும் பின்னால் நல்லாசிரியர்கள் பிரபல்யம் அடைந்தோ அடையாமலோ ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே ஆசிரியத்தின் புனிதத்துவத்தை உணர்ந்து செயற்படுதலில் நானும் நீங்களுமாய்க் கைகோர்ப்போமாக.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமைமிகு எண்ணங்கள் தன்னம்பிக்கை தரும்.

கட்டுரையாளர், கிழக்கு மாகாண இலக்கிய விழா - 2023 அரச உத்தியோகத்தருக்கான படைப்பாக்கல் போட்டியில் விருது பெற்றவர்.
(மரபுக் கவிதை: முதலாம் இடம்.)

- கிண்ணியா சபீனா -
மாஞ்சோலை, கிண்ணியா.

மாறிவரும் வண்ணங்கள் கொண்ட பொன்னான பூமியிலே மனுவினம் ஆறறிவுடன் அனு தினமும் அளப்பரிய சாதனைகளைப் புரிந்து கொண்டு வருகிறது! அதற்காக அற்புதமான வலிமை மிகு எண்ணங்கள் தான் வாண்மை தருகின்றன என்றால் மிகையாகாது.

உண்மையில் சிந்தனைகளின் வெளிப்பாடே செயல்கள் ஆகும். சிந்திக்கும் ஆற்றல் சாதிக்கத் தூண்டும்! என 'ஐன்ஸ்டைன்' கூறினார். அந்த வகையில் மனதினில் உருவாகும் எண்ணங்களே எம்மை வடிவமைக்கும்! மகிழ்ச்சி பொங்கிடும் நேரங்களில் ஆற்றல்கள் மெருகு பெறும்! 'சந்தோசம் வாழ்க்கையில் பாதி பலம்' என்பார்கள். வாழ்விலே இல்லாததை எண்ணி ஏங்குவதை விட உள்ளதைப் போதுமாக்கினால் புன்னகை மலர்ந்து, உடலும் உளமும் ஆரோக்கியம் பெறும்!

எம்முள் உதித்திடும் மகிழ்ச்சி யானது, மன பலத்தைத் தந்திடும்! நேர்ச்சிந்தனைகளை வளர்த்திடும்! மூளையின் செயற்பாட்டை ஊக்குவிக்கும்! புத்தூக்கம் பூத்திடத் தன்னம்பிக் கையும் தளிர்த்திடும்! அதன் காரணமாகக் குறித்த இலக்கினை அடைந்திடவும் முடியும் என்றால் மிகையாகாது!

இலக்கை நோக்கிய பயணத்தின் போது துணிவு, விடாமுயற்சி, பொறுமை, தியாகம் கடின உழைப்பு போன்ற அணி கலன்களால் எம்மை நாம் அலங்கரித்துக் கொள்ள வேண்டும்.

அச்சம் தவிர்த்து நேர்ச் சிந்தனைகளுடன் மலையென நிமிர்ந்து நடையிட மனபலம் அதிகரிக்கும்! கடின உழைப்பும் விடாமுயற்சியும் வெற்றி தரும்! என்றார் 33வருட காலமாக ஆங்கில அகராதியைத் தொகுத்த 'சாமுவேல் ஜோன்சன்' என்பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த இலக்கினை அடைவதற்கு வலிமையான இவ்வெண்ணங்கள் அவசியமாகும். இதற்கான இன்னொரு உதாரணம் எடிசனின் தன்னம்பிக்கையாகும். அவரது வலிமைமிகு எண்ணங்கள் பல கண்டுபிடிப்புகளைக் கண்டமை இன்று எமக்கான வரப்பிர சாதங்களாகின!

'துணிச்சலான விடாமுயற்சியே வாழ்க்கை' எனக்கூறி வாழ்ந்து காட்டிச் சாதித்து அவனியிலே அவருக்கென்று ஓர் அழியாத இடம் பிடித்துச் சென்றவர் தான் பிறவியிலேயே பார்வை இழந்திருந்த ஹெலன் ஹெல்லர் எனும் பெண்மணி! எத்தனை இன்னல்கள் தாங்கிப் பார்வையிலார் பயின்றிடும் வித்தையைக் கண்டு பிடித்திருப்பார் எனச் சிந்திக்கும் போதே அவரின் மனவலிமை புலப்படும்!

ஆகவே எம் வாழ்க்கைப் பாதையில் தடையிடும் சவால்கள் எதிரிடும் பொழுதினில் வலி தாங்கி வழியெடுத்து வானமே எல்லையெனப் பயணத்தைத் தொடர்ந்திட வேண்டும்! இதனையே 'சலிப்புக்கு இடங் கொடாமல் விழிப்புடன் உழையுங்கள்!' என்றார் பாரதி!

அடுத்து தொடர் தோல்விகளை நாம் சந்திக்கும் பொழுது, துவண்டிடாமல் இதயமதில் இதுவும் கடந்து போகும் எனும் வலுவூட்டி வாழ விழைந்திட வேண்டும். நன்றன்றாயின் அன்றே மற என்பதற்கொப்ப வாழும் வகையினை வலிமையுடன் கடைபிடிக்க வேண்டும்! தோல்விகளின்போது ஏங்கித் தவித்துக் கவலைகளில் மூழ்கிட உடலும் உளமும் நலமிழந்து வாடிடும்! வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள, தோல்விகளில் கற்றுக் கொள்ள வேண்டும்! அறிஞர் பிளேட்டோ உலகில் கவலைப் பட எதுவுமே இல்லை என்றாராம்! தோல்விகளின் போது மன அமைதி காண தியானம் அருமருந்தாக அமையுமென்றால் மிகையாகாது.



மன அமைதியும் பொறுமையும் தோல்விகளை வெற்றிகளாக்கும் என்றார் எடிசன்!

பொதுவாக மன அடக்கமின்மை தீயநெறிக்கு இட்டுச் செல்லும். பொறுமை கெட்ட விடயங்களை வெல்ல உதவும். எனவே பொறுமையுடனான சிந்தனை வெற்றிக் கனிகளைச் சொரிந்திடும் என்பதில் ஐயமில்லை!

அத்தோடு வாய்மை, உண்மை, நேர்மை, அஞ்சாமை என்பனவும் தன்னம்பிக்கை தந்திடும் வலிமையான எண்ணங்களாகும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கால கட்டத்திலே பொய்யும், புரட்டும், தந்திரமும், ஏமாற்று வித்தைகளும் மலிந்து கிடக்கின்றன. அவற்றைப் புரிந்து நடந்திடும் அவதானமும் அவசியமாகும்! மனிதமே இல்லாப் பொல்லாரிடம் மாட்டிக்கொள்ளாமல் மிகவும் விழிப்புடன் நடந்திட வேண்டும். சவால்கள் வருமிடங்களில் கலங்கிடாது தியாகங்கள் புரிந்து செழுமையடைய முயற்சித்தல் அவசியமாகும்.

உலக சுகாதார ஸ்தாபனம் உளநலமுடையோர் பற்றிக் கூறும் போது:

1. தொடர்புகளைப் பேணல். (Connect)

2. இயங்குதல். (Function)

3. சமாளித்தல். (Cope)

4. செழுமையடைதல். (Thrive)

என்பவற்றில் சிறப்பினைக் காணக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றது.

செழுமையடைதலிலே, சொந்த ஆற்றலை உணர்ந்து இலக்கைத் திட்டிமிட்டு வெற்றி பெறுதலை வலியுறுத்துகின்றது!

எதிர்மறைச் சிந்தனைகளின் போது இவற்றினை அடைய முடியாது! கோபம், அச்சம், பொறாமை, கவலை போன்ற உணர்வுகளால் மன பலம் குன்றுவதோடு ஆரோக்கியமும் கெடும்! வினைத்திறன் அற்றுவிடும்! எதற்கெடுத்தாலும் கோபிப்பவர்களால் எதனையும் சாதித்து விட முடியாது! 'கோபத்தோடு எழுந்தவன் நட்டத்தோடு அமர்வான்!' என்பது பொன்மொழியாகும்!

அது மட்டுமல்ல, தோல்வி மனப்பான்மையோடு வேதனைப் பட்டுக் கொண்டிருப்பவரிடம் எதனைத்தான் எதிர்பார்க்க முடியும்! தோல்வியை நினைந்திட தோல்வியே சொந்தமாகும்! வெற்றிச் சிந்தனை வெற்றியையே பெற்றுத் தரும் என 'மகரிஷி மகேஷ் யோகி' கூறியுள்ளார். புல்லாங் குழலின் ஓட்டையைச் சரியாகக் கையாண்டிட இன்னிசை பிறந்திடும் என்பார்கள். வாழ்க் கையில் நிதானமும் தியா கமும் உயர்ந்திட ஏணியாகிடும்! பொறுமையும் தாங்குமியல்பும் அயராமுயற்சியும் தன்னம்பிக்கை, வாண்மையை வளர்த்திடும் என்பது உறுதியாகும்!

ஆழ்கடலில் மூச்சடக்கும் போதுதான் முத்தெடுக்க முடியும். அத்துடன் ஆணவம், அகங்காரம், சுடுசொற் பிரயோகம் என்பன தவிர்த்து அழகிடும் நற்பண்புகள் குவித்துத் தரணியில் தண்மை யைப் பேணிடத் தன்னம் பிக்கையும் தானாகத் தழைத் தோங்கும் என்பது ஆணித்தரமான உண்மையாகும்!

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர், 2023 கலாபூஷணம் விருது (இலக்கியம்)
மற்றும் கிழக்கு மாகாண இலக்கிய விழா - 2023
வித்தகர் விருது (இலக்கியம்) பெற்றவர்.

# நடம்பதித்த மூத்த கவிஞர்கள்

## பாதை மாற்றும் போதை!

போதைதரும் வஸ்துக்கள் உலகில் தீய
போக்கற்ற செயல் பலதின் வித்தாமிங்கு
வாதையுடன் வலுவிழக்கும் வளமாம் வாழ்வில்
வன்செயல் தீமைகளைத் தூண்டி வாலிபம்
பேதையென மாறியுளம் சோர்விழந்து
பெருநோய்கள் பெரும்பாவ வினையும் சூழ்ந்து
வேதனையே தாங்கிப் பலர் மார்க்கம் மறந்து
விளைக்கின்ற கொடுமை பல எமது நாட்டில்.

குடு, கஞ்சா, அபின், சிகரட், சுருட்டு, பீடியும்
குடிக்கின்ற மதுவகைகள் ஒன்றாரெண்டா
படுபோதை மயக்கத்தால் உடலுறுப்பும்
பற்களதும் நிறமற்று உதடும் கறுத்து
நடுங்கியுடல் சுவாசப்பை பாதிப்புற்று
நலங்கெட்டு இரத்த அழுத்த நோயில் வாடி
கடுமைத் தீதெண்ணத்தை உள்ளமுக்கும்
காவாலிச் செயலாலே வாழ்வும் மடியும்.

புற்றுநோய், என்புநோய், எம்பிசீமா,
பிசிநோஸிஸ், குடற்புண், உயர்குருதியமுக்கம்,
கற்றயற் குருதிக்கலன் நோய், பெருநாடி வீக்கம்,
களதொண்டைப் புற்றுநோய், சிறுநீர்ப்பைக்கட்டி,
வற்றாத நெஞ்செரிவு என்றின்னும் பலவாய்
வாழ்விலே சோதனை வேதனை சேர்க்கும்
பற்றிலா வாழ்விது பாதகத் தீயில்
பாவியாய் மூழ்கிட முயலுகிறாயே!

அழிவுள்ள உலகமிது வீணாசைக் கெல்லாம்
அலையாதே அல்லாஹ்வின் பிடியுன் முன்னே
பழிசுமப்பாய் உந்தனின் சந்ததியினருக்கும்
பாவியென சமுதாயமொதுக்கி வைக்கும்
இழிவுதரும் வேதனையே இம்மை மறுமை
ஈடேற்றமில்லாமல் நரகில் புகுவாய்
விழித்தினியும் உறுதியெடு நல்லோனாக
விரைகின்ற மௌத்துமுன் திருந்திடுவாய்!

**- கலாபூஷணம்**
**மருதூர் ஜமால்தீன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையாளர், கிழக்கு மாகாண இலக்கிய விழா 2023இல் இலக்கியத்திற்கான 'இளங்கலைஞர்' விருது பெற்றவர்.



# துணிந்தவனுக்குத் துக்கம் இல்லை.

**Dr. ஜலீலா முஸம்மில் (ஏறாவூர்)**
**ஆதார வைத்தியசாலை, ஏறாவூர், இலங்கை.**



"துணிந்து நில், துணிந்து நில்! மனிதன் இறப்பது ஒருமுறைதான்."
**-விவேகானந்தர்.**

துணிவு என்பது அச்சமின்மை. துணிவு கூடப்பிறந்த ஒன்றாக இருக்கிறது. துணிவு கூடப் பிறக்காவிட்டாலும் அதனை வாழ்வில் வளர்த்துக் கொள்வது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. துணிந்து விட்டால் எதையும் சாதிக்கலாம். வாழ்வில் எதையும் சம்பாதிக்கலாம். துணிவான மனிதர்களுக்கு சிறிய சிறிய பிரச்சனைகள் பிரச்சனைகளாகவே அமைவதில்லை. உங்களுக்குள் மனத்திண்மையை வளர்த்துக்கொள்ளுங்கள். மகத்தான சக்தியைப் பெறுவீர்கள். பயப்பட்டால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. பயம் என்பது தாழ்வு மனப்பான்மை தரக்கூடியதாக இருக்கிறது. தன்னம்பிக்கை எனும் திண்மையை உங்களுக்குள் வளர்க்க வளர்க்க உங்களுக்கு ஒரு புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை உருவாக ஆரம்பிக்கிறது. அப்போதுதான் களத்தில் இறங்கிப் போராடும் தைரியம் எல்லோருக்கும் வருகிறது. எத்தனை நாளைக்கு மென்மையாகவும் பொறுமையாகவும் பணிவாகவும் இருப்பது? நமது காரியங்களை சாதிப்பதற்கு களத்தில் இறங்க வேண்டாமா? வெற்றி பெறுகின்ற திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டாமா? இரும்பினும் கனமான இதயத்தை பெற்றுக்கொள்ள வேண்டாமா? உலகிலே எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் போட்டியும் பொறாமையும் வஞ்சகமும் தலை விரித்து ஆடுவதைக் காணலாம். இவற்றையெல்லாம் எண்ணிக் கவலைப்படாதீர்கள். தொய்ந்து போகாதீர்கள். வாழ்விலே இவ்வாறான சிக்கல்கள் சகஜம். அதனைத் தீர்ப்பதற்குரிய வழியே மனதில் உறுதியை, துணிவை ஏற்றிக் கொள்வதாகும். எவ்வாறான கஷ்டங்கள் வந்தாலும் எவ்வாறான சிக்கல்கள் வாழ்க்கையில் சூழ்ந்தாலும் மனதிலே உறுதியை ஏற்றுக்கொண்டு தன்னம்பிக்கையுடன் அதை முகம் கொண்டால் நிச்சயமாக அவற்றுக்கான தீர்வைக் காணலாம் என்பது வெள்ளிடை மலை.

"மனதிலுறுதி வேண்டும், வாக்கினி லேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும், நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும், கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும், தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும், காரியத்தி லுறுதி வேண்டும்"
**-மகாகவி பாரதி.**

தயக்கம், சோர்வு, துணியாமை என்பன தோல்விக்கு மூல காரணங்களாக அமைகின்றன. தெளிவான முயற்சி வேண்டும். அதற்கான துணிவும் வேண்டும். அவ்வாறான துணிவு நமக்கு இருந்தால் வெற்றியை நாம் வசப்படுத்தலாம். ஒழுக்கமும் கட்டுப்பாடும் நம் வாழ்வில் அவசியம். எந்த சூழ்நிலையிலும் மனதைத் தளரவிடாதீர்கள். எந்தப் பிரச்சினைகளிலும் சோர்ந்து விடாதீர்கள். முடியாது என்ற சொல்லே ஒரு மூடத்தனமாக இருக்கிறது. முடியாது என்று முடங்குவது அதீத மூடத்தனமாக இருக்கிறது. எனவே முடியும் என்று முதலில் மனதால் நினையுங்கள். அதன் பின்னர் என்னால் முடியும் என்று செயலில் இறங்குங்கள். தன்னம்பிக்கையோடு செயல்படுங்கள். வெற்றி நிச்சயம். முடியும் என்பது தன்னம்பிக்கையாக இருக்கிறது. ஆனால் என்னால் மட்டுமே முடியும் என்பது கர்வமாக இருக்கிறது. கர்வத்தை, அகங்காரத்தை விட்டொழியுங்கள். அகம்பாவம் அழிவிற்கு வழி வகுக்கும். முயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் எதையும் சாதிக்கலாம். படிப்பு மட்டும் திறமை அல்ல. எல்லா வகையான அறிவும் பல்வேறு துறைகளும் அதற்கேற்ற செயற்பாடுகளுமே தற்காலத்துக்கு ஏற்றவாறு வாழ்வதற்கான அறிவை வழங்குகின்றன. சுயமான சிந்தனையும் துவளாத மனத்திடமும் அடுத்தவரோடு போட்டி பொறாமையற்ற மனதும் நன்மையை நாடி நிற்கின்ற தன்மையும் நிச்சயமாக உங்களுக்குள் உங்கள் இலக்கை அடைவதற்கு உதவியாக இருக்கும் அணிகலன்களாக விளங்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் செய்து முடிக்க வேண்டியவற்றைப் பற்றிய சிந்தனையில் என் மனதைச் சுறுசுறுப்பாக வைத்திருக்கிறேன். எனக்கு விருப்பம் இல்லாதவற்றைப் பற்றிய சிந்தனைக்கு என் மனதில் இடமில்லை."
**-ஹென்றி போர்டு.**

சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருக்காதீர்கள். சந்தர்ப்பங்களை நீங்களே உருவாக்குங்கள். சந்தர்ப்பங்களைத் தேடி நீங்கள் வீறுநடை போடுங்கள். ஒரு மனிதனுக்கு எவ்வளவு தான் திறமை இருந்தாலும் அதனை வெளிக்காட்டுவதற்குச் சந்தர்ப்பங்கள் பெரும்பாலும் அமைவதில்லை. ஆயினும் அதனால் சந்தர்ப்பங்களை அமைத்துக் கொள்வதற்கும் துணிவு வேண்டும். தேடல்கள் வாழ்க்கையில் இருக்க வேண்டும். சந்தர்ப்பங்களைத் தேடி வாழ்க்கையில் ஓட வேண்டும். உங்களிடம் இருக்கும் தவறுகளை இனம் காணுங்கள். உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள். அடுத்தவர்களின் விமர்சனங்களில் உடைந்து போகாதீர்கள். மனத்திடத்தோடு எல்லாவற்றையும் எதிர் நோக்குங்கள். துணிவு இல்லாதவன்தான் சிறு தடையிலும் தடுக்கி விழுவான். ஆனால் துணிவு கொண்டவன் தடுக்கி விழுந்தாலும் திடுக்கென்று எழுவான். திரும்பவும் வளர்வான். அவன் தன் காயங்களைப் பெரிது படுத்துவதில்லை. வீரத் தழும்புகளோடு வெற்றியை நோக்கிப் பயணிப்பான். அவன் பாதையில் பல்வேறு தடைகள், முட்கள் இருந்தாலும் அவனது எண்ணம், செயற்பாடு எல்லாம் இலக்கை நோக்கி மட்டுமே இருக்கும். அதற்காக உங்களுக்குள் துணிவை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் எண்ணங்களில் இலக்கின் தீ கனன்று கொண்டிருக்க உங்கள் செயற்பாடுகளை மாத்திரம் தீவிரப்படுத்துங்கள். இலக்கை நோக்கி உங்கள் காய்களை நகர்த்துங்கள். தங்கு தடையின்றி வாழ்க்கையெனும் நதியில் ஓடிக்கொண்டே இருங்கள். நிச்சயம் ஒரு நாள் கடலெனும் வெற்றியை அடையலாம்.

"புதிய சிந்தனைகளை முன்வைக்கும்போது, அவை சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அதனால் சிந்தனையாளர்கள் இதைப் பார்த்துப் பயந்துவிடக்கூடாது."
**-மகாத்மா காந்தி.**

எதைச் செய்தாலும் முழு ஈடுபாட்டுடன் முழு ஆர்வத்துடன் செய்யுங்கள். உங்களின் முழு சக்தியையும் துணிவுடன் பயன்படுத்துங்கள். வாழ்வின் படிக்கட்டுகளில் முன்னேறுங்கள். முடிவாக வெற்றியை அடையுங்கள். துணிந்தவனுக்கு கடலின் ஆழம் கூட சிறு துளிபோல்தான். துணிந்தவனுக்கு துக்கமில்லை. தினவெடுத்த தாகம் அடங்கும் வரை தேவையை அடையும் வரை அவனுக்குத் தூக்கமில்லை. துணிவை இழந்தவனுக்குச் சுண்டு விரல் கூட எதிரி தான். அகக் கண்ணைத் துணிவாகத் திறந்து புறக் கண்ணை மூடுங்கள். அழகிய ஆக்கங்களைப் பிரசவியுங்கள். துணிவுடன் கேள்விகளை எழுப்புங்கள். ஏனென்று எல்லாவற்றிக்கும் வினா எழுப்புங்கள். இந்த வினாக்களில்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவு உள்ளடங்கி இருக்கிறது. எதிர்த்துக் கேள்வி கேட்பவன் தைரியசாலியாக இருக்கிறான். அவனே எல்லா விடயங்களையும் துருவி ஆராய்கிறான். தொய்வில்லாமல் ஓடுகிறான். தேசத்தின் எல்லை தாண்டியும் வெற்றிகளைப் பெறுகிறான். எனவே துணிவை அருகிலேயே வைத்துக் கொள்ளுங்கள். அது தூரத்துச் சொந்தம் அல்ல. அது இதயத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு சொத்து. வெற்றியின் மறைபொருள் துணிவில் தான் இருக்கிறது. அதை மிகவும் விருப்பத்துடன் பயன்படுத்துங்கள்.

"உங்கள் சக்தியை முழுமையாகப் பயன்படுத்தும் போதுதான் உங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்கின்றது."
**-வில் ஆல்ட்ஸ்.**



எழுத்தாளர்
Dr. ஜலீலா முஸம்மில்

பிறரிடம் உங்கள் துயரங்களை பகிர்ந்து கொள்ளாதீர்கள். அது தற்காலிகமாக உங்களின் துயரத்தை குறைத்தாலும் மாறாக உங்கள் துயரங்களை கூட்டிக் கொண்டு செல்லும். ஏனெனில் அடுத்தவரின் எள்ளி நகையாடலும் ஏளனப்படுத்தலும் அதன் பின்னர் இடம்பெறுவது சகஜமாகிவிட்டது. இந்த உலகில் யாரை நம்புவது யாரை நம்பாமல் விடுவது என்ற கேள்விக்குறி எல்லோருக்கும் உண்டு. ஆதலால் துயரங்களை விட்டொழியுங்கள். மனதில் சுமக்காதீர்கள். துணிவோடு துயரங்களை எதிர்த்து நில்லுங்கள். அவ்வாறு செய்யும்போது உங்கள் துயரங்கள் அஞ்சி ஓடுவதைக் காண்பீர்கள். முயற்சிகளைத் தூண்டிலாக்குங்கள். விண்மீன்களை நோக்கி உங்கள் தூண்டிலை வீசுங்கள்.

"பயம், கோபம், பொறாமை ஆகிய மூன்றும் நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகள் அவை நமது உயர்வைப் பெரிதும் பாதிக்கும்."
**-இராமகிருஷ்ணர்.**

நம்மால் முடியாத காரியம் ஒன்றை பிறர் செய்யும் போது பொறாமை கொள்ளாதீர்கள். சஞ்சலம் அடையாதீர்கள். அதுவே தாழ்வு மனப்பான்மையை வளர்க்கின்ற ஒரு கருவியாக மாறிவிடும். ஆதலால் எவ்வாறு அவர்கள் வெற்றி கண்டார்கள் என்று துருவி ஆராயுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே மாதிரி நீங்களும் உங்கள் முயற்சிகளை மெருகூட்டுங்கள். தீயை வயிற்றுக்குள் வைத்து, வயிற்றெரிச்சலில் கருகிப் போவதை விட, இயலாமைகளை எண்ணி, நொந்து உருகிப் போவதை விட, இந்த நெருப்பை ஒரு சாண் உயர்த்தி, துணிவுடன் அதை மாற்றிக் கனலாக ஒளி வீசும் தீபமாய் அதை நெஞ்சிலே கொண்டு போய் நிறுத்தி விட்டால், அதுவே மிகப் பெரிய ஆக்க சக்தியாக மாறி விடும். அதுவே பெரிய ஓர் ஆணிவேராய் உன்னை உறுதிமிக்கவராய் மாற்றிவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

"நம் குறிக்கோளை அடைவதற்கான நமது திறமையில், நாம் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்."
**-மொனாகன்.**

நமக்கு நாம் தூண்டுகோலா, எதிரியா என்பதை நம் (பொறாமைப்) பார்வைகளே முடிவு செய்கின்றன. பிறரை வியந்துவிட்டு, அதோடு விட்டு விடுகிறோம். பாராட்டிவிட்டு அக்கணமே விலகி விடுகிறோம். மாறாக, இவர்களே நம் உந்து சக்திகள் என்பதை உன்னிப்பாகக் கவனிக்க ஆரம்பிக்கும் போதுதான், நடுநிலைமையில் இருக்கும் நம் வாழ்க்கை, உயிர்ப்புடன் உயர ஆரம்பிக்கிறது. மிகவும் துடிப்புடன் இலக்கை நோக்கிப் பறக்க ஆரம்பிக்கிறது.

"தீய செயல்களுக்கு எதிராக உங்களைக் காப்பாற்றிக்கொள்ள எப்போதும் நீங்கள் விழிப்போடு இருக்க வேண்டும்."

**-புத்தர்.**

யாரையெல்லாம் பார்த்துப் பொறாமைப் படுகிறோமோ, அவர்களே நம் ரோல் மாடல்கள் கதாநாயகர்கள்!

இரும்பைத் தங்கமாக மாற்றும் ரசவாதம் போன்ற அசாத்தியமான விஷயமல்ல இது. எல்லாவற்றையும் சாத்தியமாக்கக் கூடிய கலைதான். ஆதலால் எம்மைக் கவர்ந்திழுக்ககூடிய, எம்மைத் தூண்டக்கூடிய எல்லா விடயங்களாலும் நாம் உந்தப்பட வேண்டும். துணிவாக நாமும் இதேபோன்று வெற்றி அடைய வேண்டும் என்ற எண்ணங்களைக் கைக்கொள்ள வேண்டும். அப்படி செய்யும் போதுதான் வளமான ஒரு சிந்தனைப் போக்கோடு, துணிவான ஒரு சிந்தனைப் போக்கோடு நீ இருக்கிறாய் என்று அர்த்தம். அவ்வாறாகவே உன் வாழ்வும் உந்தப்பட்டு வளமாக அமைந்துவிடுகிறது. மிகவும் அர்த்தமுள்ளதாக மாறிவிடுகிறது.

"துணிவு என்பது கண்மூடித்தனமாக அபாயத்திலிருந்து மீள்வது மட்டுமல்ல. அதனை எதிர்நோக்கி, வெற்றி பெறுவதும்தான்."
**-ஜீன்பால் ரிக்டர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டம் என்பார்கள். ஒரு காரியத்தில் இறங்கத் துணிந்தால் மலைத்துப் பின்வாங்கி துவண்டு போய் விடக்கூடாது. பூ... இவ்வளவுதானா? இத்தனை எளிதானதா இது? என்று அதை நாம் முனைப்புடன் வேகமாக களத்தில் குதிக்க வேண்டும். இதைத்தான் துணிந்தவனுக்குத் துக்கமில்லை என்று கூறுவார்கள்.

"நாம் ஒவ்வொருவரும் இயல்பாகவே மன உறுதி பெற்றவர்களே. சிலர் மட்டுமே தங்கள் குறிக்கோளை அடையும் முயற்சியில், அதைப் பயன்படுத்துகிறார்கள்."
**-நெப்போலியன் ஹில்.**

பறந்தால் விழுந்து விடுவோம் என்று பறவைகள் அச்சப்படுவதில்லை. அச்சப்படும் எந்தப்பறவையும் கூட்டில் இருந்து வெளிவரமுடியாது பறக்க முனைந்து விழுந்து எழுந்து பறக்கும் பறவைகளே வெற்றி பெறுகின்றன. வானில் சிறகடிக்கின்றன. தன் சிறகை மட்டும் நம்பிய பயணத்தில் தேசங்களைக் கடக்கின்றன. துணிச்சலோடு வாழ்வில் எதிர்நீச்சல் அடியுங்கள். மூச்சுத் திணறாமல் வாழ்வெனும் நதியில் மூங்கி எழும்புங்கள். வைராக்கியத்தால் வைரக் கற்களை வாழ்க்கையில் கண்டடையுங்கள்.

செயலில் உறுதியாக இருக்க மனதில் துணிவெனும் உரம் போட வேண்டும். சொன்னதைச் சொன்னபடி வழுவின்றிச் செய்யவும் எண்ணியதை எண்ணியபடி துல்லியமாக அடைந்து கொள்ளவும் மன உறுதியே முதன்மையானதாக இருக்கின்றது. முழு பலத்தையும் நமக்குத் தருவதாக அமைகின்றது.

ஒரு செயலில் இறங்கினால் இன்பம் வருமோ இல்லை துன்பம்தான் வந்து விடுமோ என்ற ஐயமோ அச்சமோ சிறிதளவும், துளியளவும் இல்லாது துணிவோடு செயலாற்றும்போதுதான் செயலில் நாம் முழுவெற்றி காண முடியும்.

"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது"
**-திருவள்ளுவர்.**

"ஒரு செயலைப் பற்றிய முடிவு எடுப்பதற்குத் துணிவு வேண்டும். அந்தத் துணிவும் காலம் தாழ்ந்து வந்தால் அதுவும் நல்ல பலன் தராது." என்கிறார் வள்ளுவர்.

பல்வேறு இடங்களில் பல்வேறுபட்ட தருணங்களில் துணிவோடு ஒரு செயலில் ஈடுபடாததால்தான் நாம் பின்தங்கிப் போயிருப்போம். பெரியதோர் துன்பத்தைச் சுமந்து இருப்போம். எத்தனையோ இடங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுங்கி ஒதுங்கி நின்று நம் உண்மை முகத்தைத் தொலைத்து விடுகிறோம். பிடிவாதமாக இருந்து உண்மையான வெற்றி அடைய மறந்து விடுகிறோம்.

எப்போதுமே ஒரு செயலில் இறங்கும்போது ஆயிரம் கேள்விகள் நம் முன் வந்து நிற்கும். ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்றால் இப்போது செய்துவிடலாமா... இல்லை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமா...அல்லது செய்யாமல் அப்படியே விட்டுவிடுதல்தான் நல்லதாக இருக்குமா? என்ற குழப்பமான கேள்விகள் வந்து குமைய வைக்கும். நம்மை அடியோடு சாய்த்து விடத் துடிக்கும். இந்த நேரங்களில் மனதிலே ஒரு சங்கல்பம் எடுங்கள். குழப்பமான கேள்விகளை, குதர்க்கமான எண்ணங்களை கூட்டிக்கொண்டு குழம்பிக் கொண்டு இருக்காதீர்கள். இப்படிப்பட்ட தேவையில்லாத மன ஓட்டத்திற்குத் தடையிட்டு விட்டு துணிந்து செயலில் இறங்க வேண்டும். துடிப்புடன் தூரப்பயணத்தைத் தொடங்க வேண்டும். வீரச்சுவடுகள் வெற்றியை மட்டுமே நோக்க வேண்டும்.

அந்தத் துணிச்சல் வரவில்லை என்றால் காலத்தை மட்டும் எண்ணி எண்ணி வீணாக்க வேண்டியதுதான். எண்ணங்களை மட்டும் எண்ணிக்கொண்டே இருக்க வேண்டியதுதான். செயல்படுத்தப்படாத எண்ணங்கள் மட்டும் பயனற்றவை. அதற்குள் காலம் ஓடிவிடும். காரியங்கள் சிதறிப் போய்விடும். சந்தர்ப்பங்கள் காணாமல் போய்விடும். ஆதலால் காற்றுள்ள போதே தூற்றிக்கொள், அந்த சந்தர்ப்பங்கள் எனும் காற்றுள்ள போதே துணிவையும் வளர்த்து தூற்றிக்கொள்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"
**-திருவள்ளுவர்.**

ஏன் வள்ளுவர் துணிக கருமம் என்று பறைந்திருக்கிறார்?
எண்ணிச் செய்க கருமம் என்றுகூடக் கூறியிருக்கலாமே!

துணிவோடு செயலில் ஈடுபாடு கொள்ளுங்கள் என்பதுதான் வள்ளுவரின் கருத்தாக இருக்கிறது. துணிந்து செயலில் இறங்கிவிட்டால் தேவையில்லாத எந்தவித சிந்தனைகளும், அனாவசிய தொந்தரவுகளும் வந்து நம்மைத் திசை திருப்பி விடாது. துணிவுடன் விரைந்தவனுக்கு தடைகள் எல்லாம் தூசுகள் தான். அவை அவனின் பாதத்தின் கீழ் பணிந்து கிடக்கும். அதைத்தான் துணிந்தவனுக்குத் துக்கமில்லை என்று சொல்வார்கள்.

துணிந்தவனுக்குத் துக்கமில்லை
துணிந்தவனுக்கு
வெற்றி படியும்வரைத்
தூக்கமேயில்லை...

நன்றி!

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைகள்



# உனைத்தவிர வேறுமுண்டோ?

நிலவே நீயொருநாள் நெருங்கியெனைத் தேன்தருவாய்
மலர்வேன் மடிநிறைய மணிக்கவிதை நான்சொரிவேன்
அலைபோ லெழுமுணர்வை அருகிருந்து நீயணைப்பாய்
கலையே கலங்கரையே காலமெல்லாம் காத்திருப்பேன்

சிலையாய் இருந்தவனைச் சிறையெடுத்த சேயிழையே
தொலையாத் துயர்துடைத்த தொடுதுணையே தூயவளே
புலராப் பொழுதுகளைப் புலரவைத்த பூங்குழலே
நிலவும் அமைதியிலே நினைத்தெழுவேன் நீள்கலையே

அமுதே ஆருயிரே அழகொளிரும் ஆலயமே
சுமையே இறங்குதடி சுகமுனைநான் நினைக்கையிலே
கமழும் வாசத்திலே காத்திருப்பேன் கனிமுகமே
தமிழே! வேறுமுண்டோ? தாரணியில் உனைத்தவிர.

●

- அபூ முஜாஹித்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தாண்டு

- கிண்ணியா சபீனா.

புன்னகை பொங்கிடப் புத்தாண்டு வந்தது!
புதுமை தந்திடும் பெருமை கொண்டது!
மண்ணோரும் மகிழ இன்னாளும் வந்தது!
சின்னவர் கொண்டாடச் சிறப்பும் தந்தது!

கன்னலும் செந்நெல்லும் இன்னாளில் முற்றிட,
உழவர் மகிழும் கனவும் வென்றது!
நாமெலாம் சேர்ந்ததும் நலங்கள் பொங்குது!
ஊரெலாம் குயில்கள் கூவி மகிழுது!

பட்டாசு சுட்டிட வாண்டுகள் சேருது!
சுட்டிட்ட பட்சணம் பாலகர் உண்ணுது!
தட்டு நிறைந்த பூக்களைக் கொண்டு,
சுட்டிப் பெண்களும் கோயிலை நாடுது!

(புன்னகை பொங்கிட...)

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் வலிமை

- கவிச்சுடர்
ஏ எம் கஸ்புள்ளா.


காலல் ஒன்று துண்டிக்கப்பட்டுள்ளது
ஒரு கண் பார்வை தெரிய,
மறு கண்ணிலிருந்து இரத்தம்
வழிந்து கொண்டிருக்கிறது.

காதோரம் நசுக்கப்பட்ட
பகுதியை வலது கை தூக்கிப்
பிடித்துக் கொண்டது.
மிகுதி இருக்கும் கை
சிதைந்து போய்
இருந்தும் இல்லாத போலிருந்தது.

தனது அத்தனை
உறுப்புக்களும்
உடைந்தும் சிதைந்தும்
கிடந்த போதிலும்...

தவழக்கூட முடியாத
அந்த பலஸ்தீனச் சிறுமி,

யூதப் படைகளின் முன்னால்
தனது தேசிய கொடியை
திரும்பிப் பார்த்தாள்.



உயிர் மீதமிருப்பதை அறிந்த
ஷியோனிஸ்டுகள்
துப்பாக்கிகளுக்கு
இரையாக்கினார்கள்.

"அல்லாஹ் பெரியவன்"
"அல்லாஹ் பெரியவன்"
என்ற இறுதி மூச்சுடன்
அந்த குழந்தையின்
உயிர் பிரிந்தது.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாவின் சிறகுகள்

- மயிலிறகு மனசு ஷிபானா அஸீம்.

பால்யத்தின் சிறுமிக்கு
மட்டற்ற அன்புகளினால்
சுதந்திரங்களினால்
கேட்டது கிடைப்பதானால்
இறுமாப்பினால்
நம்பிக்கைகளினால்
இலட்சியங்களினால்
சின்னச் சின்ன வெற்றிகளால்
கனவுகளால்
கொண்டாட்டங்களால்
ஆர்ப்பரிப்புக்களால்
ஆசைகளாலென
குறைந்தது ஆயிரம்
சிறகுகளேனும்
அவள் ஆன்மாவில் முளைத்து
வானுக்கும் பூமிக்குமாய்
ஓய்வின்றியே பறந்து திரிவாள்


பின்வரும்
பருவங்கள் ஒவ்வொன்றிலுமாய்
ஒவ்வொரு சிறகுகளாய்
கத்தரிக்கப்பட்டு

இறுதியில்
அவளிற்கு பரிசளிக்கப்படும்
நீயும் பெண்தானெனும்
ஒரே சிறகினைக் கொண்டுதான்
பெருவானத்தினை
பெரும் மலையினை
பெரும் சமுத்திரத்தினை
பெருங்காட்டினை
கடக்கவேண்டும்

இன்னும் சிறகுகளற்ற
ஆன்மாவினால்தான்
இப்பிரபஞ்சத்தையே
புதிது புதிதாய்
புதுப்பிக்கவேண்டும்

அத்தனை வலிமையானது
பெண்ணெனும் ஆன்மா.

●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Translated by:
**- Sri N srivatsa**
*Noida, India.*

By unlimited love,
freedom,
getting whatever
asked for,
pride,
beliefs,
targets,
tiny little victories,
dreams,
celebrations,
uproars
and desires,
the little girl
in her childhood
would have sprouted
at least a thousand feathers
on her soul
and fly between
the sky and the earth
ceaselessly.

Having one feather
after the other
snipped away
in the stages
that follow,
with the lone feather
'You are also a woman'
that is presented to her
in the end

she has to cross
the great sky,
the huge mountain,
the vast ocean
and the huge forest.

And with only
the featherless soul
she has to renovate
this universe
afresh again.

A soul called woman
is so powerful.


●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரல் தடவும் வீரியம்



தெருப்பாடகனின்
மனைவியாகிறேன்.

பல்லவியை அவன் மீண்டும் பாடுகையில்
தட்டேந்தி போகிறது வாழ்க்கை.

ஒவ்வொரு பாடல் இடைவெளியிலும்
தேடிவரும் கர்ப்பத்தின் தவிப்புக்களை
நடனம் என்றே நம்புகின்றேன்.


சில்லறை போடுகையில்
விரல் தடவும் வீரியத்தை
ஆண் என்று நிறுவுவது யாரோ?

அவன் பாடலை முடித்துவிட்டு
என்னை பத்திரப்படுத்தும் போதெல்லாம்
அம்மணமாய் தெரிகிறது
கண்டதும் காணுவதும்.

●

- காரையன் கதன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊழ்

- முகமட் றாபி.

உனக்காக காத்திருத்தல்
என்பதை விட
உயிரை காவல்பூண்டிருத்தல்
என்ற பதமே அழகு

சொல்லாமல் வருவதே
உன்னழகு

நான் திறந்திருக்கிறேன்
எப்போது வருவாய்
எனை மூடி வைக்க

நான் பிறந்திருக்கிறேன்
எப்போது வருவாய்
என் காலத்தை சுருட்டிக்கொள்ள

மழை நாளொன்றில்
சட்டென மின்னல் போல்
வருவாயா

விடியலுக்கு சற்றுமுன்
இழுத்துப் போர்த்திய
பனிப்பொழுதொன்றில்
அல்லது
மாலைக்கு வெளியே
ஊரிரைச்சல் அடங்கும்
பொழுதில் வருவாயா

பாதையின் ஒரு திடீர்
வளைவில்
உன்னைத் திரட்டி நிற்பாயா
ஒரு இருமலுக்குள்
ஒரு விக்கலுக்குள்
ஒரு புரையேறலுக்குள்
புதைந்து இருப்பாயா

வாசற்படியில்
பளிங்குத்தரையில்
வழுக்கிவிழ வைத்து
முழுவதுமாயென்னில்
படர்வாயா

நீவர நாளாகலாம்
அன்றில்
நாளையும் வரலாம்
உன்னைத் தவிர்த்து
தாண்டி
நகர்தலென்பது சாத்தியமன்று

ஓ... என் மரணமே
எதிர்பாரா தருணமொன்றில்
எதிரில்
மிக அருகில் நிற்பாய்

என் அற்ப இயக்கம்
சூனியமாக
மெய் சரிய உயிரெடுப்பாய்

வரும் போது வா
அதுவரை காத்திருக்கிறேன்.


●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மா

- தியத்தலாவ
எச். எப். ரிஸ்னா.



பறந்தோடும் பட்டாம் பூச்சியை
பாய்ந்து பிடித்துக் கொன்றான்...
வேலி தாண்டும் முயலைப் பிடித்து
வெறிகொண்டு தின்றான்!

சிறு துளியாய் களவு செய்து
குரூர திருப்தி கொண்டான்...
அயல் வீட்டை சுடுகாடாய்
ஆக்குவதாய் நின்றான்!

மழைக்காலம் வந்தாலே
மனக்குமுறல் கொண்டான்...
சாக்கடை நீர் அடுத்த வீட்டில்
பாய்ந்து ஓடச் செய்தான்!

சிறுகுழந்தை எனப்பாராமல்
சிறுமைத்தனம் செய்தான்...
ஊரோடும் உறவோடும்
பகைமையை வளர்த்தான்!

தளிர்த்தோங்கும் பசளிச்செடியில்
சுடுநீரை விட்டான்...
அவன் வீட்டில் மட்டுமவன்
அனைத்தையும் நட்டான்!

காலம் தன் பாட்டுக்கு
கருத்தோடு நகர்ந்தது...
காலம் கேள்வி கேட்கையில்
வேரோடு அறுந்தது!

ஆஸ்பத்திரி கட்டில் தினம்
அனல் கக்கி நின்றது...
வைத்தியரை கண்ட கண்கள்
நிலை குத்தி நின்றது!

அகமெங்கும் அழுக்குடனே
வாழ்வினைக் கழித்தது...
பேரலையாய் எழுந்து நின்று
பெரும் பயத்தைத் தந்தது!

சேர்த்துதெடுத்த சொத்தெல்லாம்
நோயோடு சென்றது...
சதி செய்து வாழ்ந்தவனை
விதி மட்டும் வென்றது!


கர்மாவின் விளையாட்டில்
காரணங்கள் இருந்தது...
காரணங்கள் அறிய முன்பு
உயிர் பிரிந்து சென்றது!!!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டாம் பூச்சி மனசு!



பனித்துளிகள் கண் சிமிட்டி
நாணுகிற நேரம்
சூரியனோ சிரித்தபடி
வானமதில் ஏறும்

ஓடையிலே சலசலத்து
ஓடுகிற நீரும்
காளையிவன் காதலினை
கண்மணிக்குக் கூறும்

அக்கரைக்குப் போகுமிவள்
அங்கமெல்லாம் தங்கம்
பொத்தி வச்ச ஆசைகளோ
மோதுதடி எங்கும்

ஊர் கதைக்கு பயந்திருந்தால்
காதலெங்கே வாழும்
கை பிடிக்கும் நாளுக்காக
காத்திருக்கேன் நானும்

பார்வை ஒன்றை வீசிவிட
தயங்குறியே இன்னும்
பார்த்து நீயும் புன்னகைத்தால்
எண்ணமெல்லாம் வண்ணம்

கொஞ்சம் உன்னைக் கொஞ்சிவிட
தந்திடடி கன்னம்
போதுமடி ஆயுளுக்கும்
தேவையில்லை அன்னம்

பாதகத்தி உன் நினைவு
என் உயிரைக் கொல்லும்
பட்டாம் பூச்சி மனசுக்குள்
பல கனவுகள் துள்ளும்

இரவுகளை கேட்டுப் பாரு
ஏக்கங்களைச் சொல்லும்
நமக்குள்ளே நாம் கரைய
காதலின்னும் வெல்லும்!!!

●

**- வெலிகம**
**ரிம்ஸா முஹம்மத்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் கொள்கிறேன்.


- ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்.

பசுமைகளைப் பனிப் பஞ்சுகளால்
போர்த்திக் கொண்டு மெல்லென
வெடித்து இதழ் விரியப்போகும் பூக்கள்
இளந்தளிர்களை குளிர்க் கரங்களால்
இறுக அணைத்துக்கொள்ளும் அழகிய
விடியலின் மீது காதல் கொள்கிறேன்.

அவ்வப்போது மனதை
ஆட்கொள்ளும் கவலைகள்,
இயல்புநிலை மாற்றங்கள்
அத்தனையும் மறந்து போகிறேன்
உற்சாகமாய் ஓடித் திரியும்
எறும்புகளின்
குட்டிக்கால்களை நேசிக்கிறேன்.

தும்பிகளின் இறக்கைகளில்
மின்னும் வானவில்லின்
நிறங்களை இரசிக்கிறேன்
எக்ஸோராக்களில் அமர்ந்து
தேன் பருகும்
தேனீக்களின் உற்சாகம் கண்டு
உண்மையில் வியக்கின்றேன்.

மறைகூறிய மருந்தை
அழகிய விருந்தை
அடிக்கடி உணர்ந்து வியக்கிறேன்
நஹ்லையும் நம்லையும்
உதாரணமாய் எடுத்து என்
பிள்ளைகளுக்கும்
எழிலாய்க் கூற ஆசைப்படுகிறேன்
இயல்பாய் இருத்தலை எப்போதும்
நான் மிக விரும்புகிறேன்.
என்னால் மற்றவர்களின்
இயல்புநிலை கெடுமானால்
மற்றவர்களால் என் இயல்புநிலை



சீர்குலையுமானால் சந்தர்ப்பம் கருதி
செயற்கையாக மாறிக்கொள்ளலில்
நான் அதிகமாய்த் தோற்றுவிடுகிறேன்.

அதனாலோ என்னவோ
நிலையறிந்து தானாய் விலகிக்கொள்ள
வெகுவாய் முயல்கிறேன்
இயற்கையை நேசித்தலில்
தினமும் மின்னலாய்ப் பறக்கும்
நேரங்களையும்
சிலவேளைகளில் மறந்து போகிறேன்.

அத்தனை பசுமைகளையும்
பருகிக்கொண்டு
மலர்களில் உறைந்திருக்கும்
பனித்தூவல்களைத் தொட்டு
கண்களில் ஒற்றிக்கொள்கிறேன்..

சுகந்தங்களைச் சுவாசித்து
மகிழ்கிறேன்
ஒளிவு மறைவில்லா என்
புன்னகைகளில் இயற்கையின்
ஊடுருவலின் நேசமும்
தாக்கம் செலுத்துவதில் மகிழ்கிறேன்.
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-ஷெண்பகச் சோலையாள்
ஆய்ஷ்.

# பறக்கும் பூ


விரல்களுக்கு அகப்படாத
பட்டாம்பூச்சி பறக்கிறது
பார்வைக்கு அகப்பட்டு
அவ்வப்போது.

காதுகளில் கேட்காத
அதன் சிறகோசைகள்
மறைந்து போகின்றன
விடியலின் தென்றல் காற்றோடு.

ஒரு பறக்கும் பூவாய்
வாடாத வண்ணங்களுடைய
சிறகுகளில் காற்றில் கலந்துவிட
நறுமணங்கள் இல்லை.

சிமிட்டும் சிறகுகளுடன்
தேனுண்ண
பூக்களில் அமரும் பூவாய்
பூமீது அமர்கிறது
பூவையிவள் மனதை
இறுகப் பற்றிக் கொண்டு.

நொடிகளாய் வழியும்
எனது நிமிடங்களையும்
மனதையும்
சிறைப்படுத்திச் சென்ற
வண்ணத்துப் பூச்சியின்
வண்ணங்கள் ஒட்டியிருக்கின்றன
என் பார்வைகளில்.



வண்ணத்துப் பூச்சியாய்
வண்ண வண்ணமாய்
செட்டைகள் கொண்ட
சட்டைகள், பாதணிகள்
அணிவித்து
எனை அழகு பார்த்த ஞாபகம்
கண்களை நனைக்கின்றது.

மீள்தல்கள் வண்ணவண்ணமாய்
செட்டை விரிக்கின்றன
மாளாத நினைவுகளோடு.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## - இமையி.



விட்டுப் போன வலியும்
எட்டி மிதித்த அடியும்
விளக்கம் கூறி விரிந்த
புன்னகையோடு விலக,

துரத்திவிட்ட
துரோகமும்

பிரித்து பார்த்த
பரிகாச பாசங்களும்

வாஞ்சையாய்
வஞ்சித்த நேசங்களும்

தாவி தொத்தும்
வருத்தங்களும்

காரணம் கூறி
உன்னிடம் குடில் அமைக்க

இடம் கொடுத்து
நீயோ மடியும் கொடுக்க

உன் நினைவாய் கூடவே இருந்து
உயிரெடுக்கும்.

இதற்கெல்லாம் உனக்கும்
மேமிச்சமாய்
நேரமிருக்குமேயானால்
மகிழ்ந்திருக்க
உனை மகிழ்விக்க
தந்த வாழ்வை வாழ
உனக்கும் ஏனோ நேரமில்லை
மெய்யாய்
உனக்காய் தரும் அன்பை
அனுபவி...

உறவே!
மறக்க முடியாது போனாலும்
நினைக்க வழி செய்யாமலாவது
இருக்கும்

நிஜமெது...?
ஐயப்படாதே

உனக்காய்
உன் முகம் காண
கள்ளமின்றி
காரணமின்றி
சிரிக்கும் உறவும்
உன் கூடவே இருக்க
அதுவே நிஜம் என
கண்டறி...

நிகழ் ஏற்று
நிஜம் உணர்

நிம்மதி நீயாய் உருவாக்க
எவரையும் தடை சொல்லாதே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணை பிரிந்து வாழ்தல் என்பது
அவள்(ன்) நடத்தைக் கெட்டவள்(ன்)
என்று பெயர் கொண்டதினால் என
உங்களுக்கு யார் சொன்னார்...

பிரிதல் என்பது
பிடிப்பின்றி பிடித்தம் இன்றி
பிடித்துவைத்ததில் பிணைப்பின்றி
பிரிக்கவேண்டி பிணமாக முன்னே
பிழைத்து வந்து
பிரிவுக்கு தானே பிணையாகித்தானே?

அவள்(ன்) நடந்து கால் வலிக்க
நடை நிறுத்தியிருக்கலாம்...

பிடித்திருந்த பிடி உடைய
பிடிமானம் இன்றி தள்ளாடி இருக்கலாம்...

தனை சமன் கொள்ள ஓரிடம் கொஞ்சம்
நின்றும் இருக்கலாம்

வந்த தூரம் எண்ணி களைப்பில் சற்று
ஓய்வெடுக்கலாம்...

உங்களுக்கும் ஏன் இந்த வீண்
அலசல் கூறுங்களேன்...

அவள்(ன்) நடக்கத் தெரியாது
விழுந்தவள்(ன்) இல்லை

ஊனமும் இல்லை
யாரும் ஊட்டவும் இல்லை
கால் இடறி விழுந்தவள்(ன்) என்பது
உங்களுக்கோ தெரியாத போது,
அவள்(ன்) இருக்கும் இடம் கண்டு
நீங்களாய் எப்படி
எதுவும் நினைக்க முடியும்...
கூறுங்களேன்...

உங்கள் பார்வைக்கும், பொருளுக்கும்
அவள்(ன்) எப்படி பொறுப்பாக முடியும்...?

உம்மிடம் இருக்கும்
உங்கள் கண்ணிரண்டுமே
பார்க்கும் இருவேறு திசை என்றிட,

இதுவெல்லாம் ஏன் கூறுங்களேன்...

குளத்தில் மலரலாம் தாமரை
சேற்றில் மலராது என்று யார் கூறினார்
கூறுங்களேன்...
நிறம் மாறியதா இல்லை
அதன் இயல் மாறியதா?

வெண்மை என சுட்டெரிக்க நீங்கள்
எந்தச் சங்கு கருமை கொண்டது?
சொல்லுங்களேன்...

உங்களுக்கு அது பெறுமதி இல்லை
என்று வீசி எறிந்தீர்கள்
குப்பைக்குச் சென்றும் முத்தோ
இப்போதும் பளிச்சென்றுதான் இருக்கிறது


வீணாய் பழி சொல்லாதீர்கள்...
அவளும்(னும்) வாழட்டும்

ஐயோ!
வழி காட்டவேண்டாம்...

வழி மறிக்காதீர்கள்...
அது போதும்.

வாழ்ந்துகொள்வார்கள்.

- இமையி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்முனைக் கவிதைகள்

**- அய்ஷத்அப்சத்.**

பாலமுனை-04.



கள்ள ஓட்டு
போட்டு வென்றவன்,
வீட்டு வாசலில்
பெரிய பூட்டு.

♦♦♦

மாமி மருமகள்
இடைவெளி எதற்கு,
தாய் மகளாய்
உறவினை பெருக்கு.

♦♦♦

நெஞ்சில் ஓவியமாய்
வந்து காவியமானாய்,
சோகங்களை மானியமாய்
தந்து சூனியமானாய்.

♦♦♦

சந்தி சிரிக்க
சரிந்து கிடக்கிறாய்,
சாராயம் குடித்து
சாவை அழைக்கிறாய்.

♦♦♦

பேராசை மனது
பெருமையில் புரள்கிறது,
மறுமையை மறந்து
இம்மைக்காய் வாழ்கிறது.

♦♦♦

ஓரப் பார்வையால்
உசுப்பேத்திச் செல்லுகிறாய்,
சொட்டுப் புன்னகையில்
உயிரையே கொல்லுகிறாய்.

♦♦♦

வார்த்தைகளை மந்திரித்து
வாக்குறுதி தூவுகிறாய்,
மக்களினை ஏமாற்றி
மந்திரியாய் உழைக்கிறாய்.

♦♦♦

காதல் வலைவீசி
வேசம் போடுகிறாய்,
காமம் தணிந்தபின்
ஒதுங்கிக் கொ(ள்ளு/ல்லு)கிறாய்.

♦♦♦

பள்ளி உறவுகள்
தள்ளிப் போனது,
மீளும் நினைவுகளில்
துள்ளிடும் மனது.

♦♦♦

உன்னை மொய்க்கும்
கண்கள் ஏராளம்,
உடைகளில் நீ
காட்டுகிறாய் தாராளம்.

♦♦♦


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை பிறந்தால்
# வழி பிறக்குமா!

பெரியநீலாவணையூர்
- த. நடேஸ்.


**தை** மாதம் பிறக்கின்றது
தரணி யெங்கும் சிறக்க வேண்டும்
தை மகளின் வருகைக்காக
காத்திக்கின்றோம் நாங்களும்.

காத்திருந்த எமக்கு கடவுளின்
நற்கருணையும் கிடைக்க வேண்டும்
கானம் இசைந்த குயில்களும்
கானம் இசைக்க மறுத்ததேனோ!

வயல் வெளிகளும் பச்சைப்பசேலென
அழகாக காட்சிதந்த வேளை
நாங்களும் பூரித்துப் போய்நிற்க
கானல்நீராய் ஓடியது எம் கனவுகள்

வானமும் பொறுக்க முடியாமல்
கொட்டித் தீர்த்தது மழையாக
வயல் நிலங்களும் காட்சியளித்தன
வரம்பு நிறைந்த வெள்ளக்காடாக

கடவுளுக்கும் பொறுக்க முடியலையோ
நாங்கள் படுகின்ற வேதனை-சோதனை
எரிகின்ற நெருப்பில் எண்ணெய்
ஊற்றுவது போன்று நம்வாழ்வு.



தைபிறந்தால் வழிபிறக்கும் என்றோம்
எங்கள் கனவுகளும் நனவாக
தைமகளின் வருகைகாண கண்கள்
மறுத்ததேனோ கனவுகள் பொய்த்ததேனோ!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை கொடியது

- எம். ஏ. மாஹிறா
(ஹில்மா)

தனிமை கொடியது
நம்மைப் பலரும்
பதம் பார்க்கும் - தனிமை
என்றும் கொடியதே.

நல்லோரும் வல்லோரும்
எல்லோரும் எம்மை
ஏறி மிதிக்கும் - தனிமை
என்றும் கொடியதே.

காரணம் காட்டிக்காட்டி
எல்லோரும் எம்மைத்
தட்டிப் பணிக்கும் - தனிமை
என்றும் கொடியதே.


எதையும் செய்ய முடியாதபடி
எல்லாமே எம்மை விட்டுவிலகி
வெகுதூரமாய் இருக்கும் - தனிமை
என்றும் கொடியதே.

சாணேற முழம் சறுக்கிய கதையாய்
சாதனைகள் எதனையும்
செய்ய முடியாதபடி
தவியாய் தவிக்கவைக்கும் - தனிமை
என்றும் கொடியதே.

தில்லென்ற மனமொன்றை
வைத்துக் கொண்டு
தன்னம்பிக்கைதனைச் சுமந்து
சுய சம்பாத்தியத்தில்
நாம் வாழும் - வாழ்க்கை
என்றுமே கொடியதல்ல.

வீரியமில்லா மனமெல்லாம்
துவண்டே விழும் வாழ்வினிலே
தனிமை ஒரு கேடல்லவே!


●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி நட்பு



பதினெட்டு வருட வாழ்வினிலே
தோழமைகள் பல கண்டேன்
பலருடனும் பண்பாய் பழகினேன்
பெற்றோரும் உடன் பிறப்பும்
பின்னிப் பிணைந்திருக்கும் போது
தோழமையின் அன்பு
எனக்குத் தேவைப்படவில்லை.

உறவுகளைத் தவிக்க விட்டு
உண்மைப் பாசத்தை
உயிருக்குள் புதைத்து
நெஞ்சினைக் கல்லாக்கி
தனிமை வாழ்வினைத் தேர்ந்தெடுத்தேன்
கவலைகள் கூற கண்ணீர் துடைக்க
அன்பாய் ஆறுதல் சொல்லி
அரவணைக்க தோழியொன்று
தேடியது என் மனது.

உண்மைப் பாசங் காட்டி
வேசங் கொண்ட ஒருத்தி
அழகாகப்பேசி என்னை ஆட்கொண்டாள்
பிறப்பு முதல் எல்லாம் சொல்லி
நட்பின் சின்னம் தானென
என்னை நம்ப வைத்தாள்.

என்றும் பிரியா தோழிகள் நாமென்றாள்
அவள் சொன்ன வார்த்தைகளை
அமுதமென நெஞ்சில் தேக்கிவைத்தேன்
யாரிடமும் பகிர்ந்து கொள்ளாமல்!
ஆனால் அவளோ,
அவளது பொய்யான பாசத்தைக்கலைத்து
இல்லாத பொல்லாதவை எல்லாங்கூறி
பொறுமை இழந்தவள்போல் என்னைக்
கொட்டித் தீர்த்தாளாம் நண்பர்களிடம்
ஆனாலும் நம்பமறுக்கிறது என்மனது.

இருந்தாலும் அவள் நட்பையிழக்க
மறுக்கிறது என் உள்மனம்
அவளுடன் முகஞ்சுளிக்கப் போவதில்லை
ஏனென்றால், தீர்ப்பு நாளில் சந்திப்பேன்
எனக்கான நியாயத் தீர்ப்புடன்!

வாழ்வு தோறும் பழகும்
உண்மைத் தோழமை என்றாலும்
படைத்தவனையும் பெற்றவர்களையும் தவிர
உண்மையென எதுவுமில்லை இவ்வுலகில்!

எல்லோருடனும் அளவுடன்
பழகிக் கொள்வோம்.

●

**- முஹம்மட் பசீல்
பாத்திமா மிபாஷா
(பஸ்னா)**

பெரியநீலாவணை-01, மருதமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலுவில்

# நழீம் ஹனீபா

கவிதைகள்

## தன்முனைக் கவிதைகள்:

நேயம் கொண்ட
மனிதனாய் மிளிர்வோம்
அனைத்து உயிர்களையும்
அரவணைத்து வாழ்வோம்.

துணிந்து முயன்றால்
வெற்றி பெறுவாய்
சோம்பல் கொண்டால்
தோல்வி காண்பாய்.

உயிர்களை மதித்து
பரிவு காட்டுவோம்
மனிதநேயம் கொண்ட
மனிதனாய் மிளிர்வோம்.

உறவுகளின் புறக்கணிப்பால்
தனிமை வதைக்கிறது
நோய்கள் சூழ்ந்து
வாழ்க்கை கசக்கிறது.

காரியங்களில் அவசரம்
ஆபத்தை விதைக்கும்
நிதானம் கொள்வது
நன்மை பயக்கும்.

பொறுமை என்றும்
நன்மை தந்திடும்
வாழ்வில் முன்னேற
உந்துதல் வழங்கிடும்.

தொடர் முயற்சி
வெற்றி தந்திடும்
தயங்கி நின்றால்
தோல்வி வந்திடும்.

மலரும் காலை
இனிமையாக இருக்கும்
உழைத்து முன்னேற
உற்சாகம் பிறக்கும்.

உண்மையான நட்பு
விசுவாசத்தால் பலமாகும்
தேவையில் உதவி
உயிரான உறவாகும்.

நன்றாகப் படித்து
திறமையை வளர்த்திடு
விடாமுயற்சி வென்று
வாழ்வில் உயர்ந்திடு.

குவியும் பாராட்டுகள்
உந்துதல் வழங்கிடும்
முயன்று முன்னேற
உற்சாகம் பிறந்திடும்.

மனதில் அமைதி
மகிழ்ச்சி அழிக்கும்
குளம்பிய உள்ளம்
நிம்மதியின்றித் தவிக்கும்.

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்முனை இயைபுக் கவிதைகள்:

சீர் கல்வியை
அழகாய் புகட்டுவோம்
வாழ்வில் உயர்வை
அடைய உதவுவோம்.

குழந்தைகள் பொம்மைகளோடு
விளையாடி மகிழும்
துள்ளிக் குதித்து
மனங்களைக் கவரும்.

எழுத்தாளனுக்கு அடையாளமாய்
எழுதிய புத்தகங்கள்
முயற்சிப்பவர்களுக்கு வழிகாட்டும்
முத்தான கருத்துக்கள்.

பேராசை கொள்வது
மகிழ்ச்சியைக் கெடுக்கும்
வாழ்வில் நிம்மதியை
முற்றாக அழிக்கும்.

ஆசைகள் நிறைவேற
ஏக்கம் நிறைந்திருக்கும்
காத்திருக்கும் உள்ளத்தில்
கனவுகள் பூத்திருக்கும்.

•••

## ஹைக்கூ கவிதைகள்:

பாயும் அருவி
கல்லில் விழுந்து நகர்கிறது
நிலவின் பிம்பம்.

வளைந்து செல்லும் பாதை
தெளிவாக தெரிகிறது
இரவில் ஒளிரும் நிலா.

கல்லறைத் தோட்டம்
நீண்டு தெரிகிறது
நேர்த்தியாக அமைந்திருக்கும் பாதை.

வானில் முகில்
விரைவாக நகர்ந்து செல்லும்
பயணிகள் விமானம்.

உருகும் பனிமலை
பாறையில் விழுந்து நகரும்
நீர் வீழ்ச்சி.

வீர மரணம்
தெளிவாகத் தெரிகிறது
தியாகத்தின் அடையாளம்.

பனி மூட்டம்
கீழிறங்கி வருகிறது
பயணிகள் பேருந்து.

மலரும் தீபத்திருநாள்
மிகுந்த மகிழ்ச்சியைத் தரும்
சிறுவர்களின் குதூகலம்.

நாளிதழ் வாசிப்பு
தெளிவாகத் தெரிகிறது
முதியவரின் ஆர்வம்.

தாமரை இலைகள்
குளத்தில் மிதக்கின்றன
பச்சைப் பாசிகள்.

கணவனின் இழப்பு
தெளிவாகத் தெரிகிறது
பாட்டியின் ஏக்கம்.


ஆற்று நீர்
மெல்ல மெல்ல நகர்கிறது
பாறையில் நத்தை.

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கவிஞன் ஆனால்!



அழகிய தமிழால்
வார்த்தைகளை வடிப்பேன்.

கற்பனை வானில்
சிறகடித்துப் பறப்பேன்.

காதல் கவிதைகளால்
காவியம் படைப்பேன்.

முயற்சித்து முன்னேற
உந்துதல் கொடுப்பேன்.



சமூக அவலங்கள்
நீங்க உழைப்பேன்.

போதையின் கெடுதியை
தெளிவாக உணர்த்துவேன்.

சிந்தனையைச் செதுக்கி
வார்த்தைகளால் வழிகாட்டுவேன்.



பெண்கள் முன்னேற்றத்தில்
கவனம் செலுத்துவேன்.

சாதிக்கும் திறனை
வளர்க்க உதுவுவேன்.

அமைதி, சமாதானம்
உருவாக எழுதுவேன்.




**- நழீம் ஹனீபா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர், தனது 'ஆயத்' கவிதை நூலுக்கான 2023 அரச சாஹித்ய மண்டல விருதினைப் பெற்றுக்கொண்டவர்.

# படித்துவற்றில் பிழுத்தவை



# காட்டை மிரட்டும் இரும்புக் குதிரையின் குரல்

மிக அண்மையில்
வானொலியில் ஒலிக்கும்
மறக்கடிக்க முடியா
இனிமையான பாடல் தொட்டு

வீட்டிலிருந்து வரும்
மிக முக்கியமான
அழைப்பு முதற் கொண்டு

வேறு வழியின்றி
ரயிலில் பாடிப் பிழைப்பு நடாத்தும்
கைவிடப்பட்ட சிறுவனின் பாடலென

எல்லா மொழிதல்களும்
இரும்புக் குதிரைகளின்
சகிக்க முடியா ராட்சத குரலினிடை
சிக்கி நசிபட்டு உதிர்ந்து போகின்றன

ஏனெனில் புத்தம் புதிதாக
தருவிக்கப்பட்ட ரயிலாக இருந்தாலும்
அது தனது குரலை மட்டும்
யாருக்காகவும் மாற்றுவதில்லை
ரயில் பயணங்களில் பகிரப்படும்
அனேகமான வார்த்தைகள்
மறுமொழி பேச முடியாது
அரத்தமற்று இறந்து போகின்றன

குழந்தையாக இருந்தாலும்
அதன் குரல்
ஊடறுத்துச் செல்லும் வனத்தை
மிரளச் செய்யாமலில்லை

தனது குழம்பொலிகளை
தளர்த்தும் பட்சத்தில்
அதனை இரும்புக் குதிரையென
பயணிகள் ஏற்பார்களா என்ன?

●

- ஜமீல் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ஹுமைரா அல் அமீன்.

பெருமழையொன்றின்
பேரிரைச்சல் தாண்டியும்
வீட்டுக்குள் விழும் துளியின்
சத்தம் பலமாகக் கேட்கிறது.

துளை விழுந்த கூரையிலிருந்து
ஒழுகும் நீர்த் துளிக்காய்
வைத்துவிட்ட அலுமினியப் பாத்திரம்
விட்டு விட்டு இசைக்கிறது.

மழையின் வேகத்திற்கிசைந்து
வேகமாகவும் மெதுவாகவும்
தாளமிசைப்பதால் தான்
பேரிரைச்சலையும் மீறுகிறது அதன் ஒலி.

மழையை ரசிக்கத் திறக்கும்
கதவின் சத்தத்தில்
வாசலில் படுத்திருந்த பூனை
பயந்தோடி நனைகிறது.

பாவம்.. அது அதன் விதி
ஏழை வீட்டு வாசல் தேடித் தானே
எப்போதும் வரும் அந்த
அநாதைப் பூனைகள்.

அதற்கெங்கே தெரியப் போகிறது
அவனிடம் கதவு மாற்ற
காசில்லையென்பது.

வறுமைக்கும் பொறுமைக்கும்
உள்ள தொடர்பு போலத்தான்
இந்த மழைக்கும் இசைக்கும்
பொழிந்து கொண்டேயிருக்கிறது.

●

அதிகாலையின் கருக்கலில்
இந்தப் பாறையின் மீது
அமர்ந்திருக்கிறேன் மாயா.
சாம்பல் நிறம் கொண்ட மேகங்கள்
சிவக்கத் தொடங்கிவிட்டன.
அலைகளின் சப்தங்கள் கேட்டு
பறவைகள் எழுகின்றன.
நான் இன்னும் உறங்கவே இல்லை.
எனது மௌனத்தின் சொற்கள்
அலைகளாகி
பாறைகளில் வந்து மோதுகின்றன.
எனது பூனைக்குட்டி என்னைத்
தேடி வந்துவிட்டது.
நான் இன்னும் உறங்கவே இல்லை.
சிறு குரலெழுப்பியபடி
எனது காலைச் சுற்றி வரும் அதனிடம்
எனது பிரார்த்தனைகளைச்
சொல்லிக் கொண்டிருக்கிறேன்.
உறக்கமற்ற எனது இரவிலும்
துர்கனவுகள் எனைத் துரத்துகின்றன.
கண்ணீரின்றி எனது நாட்களை
நான் கடக்க வேண்டும்.
துர்கனவுகளின்றி
எனது இரவிலிருந்து விழிக்க வேண்டும்.
நதியில் சலனமற்றுக் கிடக்கும்
கூழாங்கல்லின்
பேரமைதியை உணர வேண்டும்.
பூனைக்குட்டிகளோடு நானுமொரு
பூனையாய் வீடு திரும்ப வேண்டும்.
தோலுரித்த ஆரஞ்சு பழமென
சூரியன் கடலிலிருந்து வானெழுகிறது.
நான் இன்னமும் உறங்கவேயில்லை.
இன்னும் எவ்வளவு நேரம்
இந்தக் கடலைப் பார்த்துக்
கொண்டிருப்பது மாயா?

●

- மனுஷி -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு நாமே வரையறுத்த
அன்பின் வாசலில்
நின்று கொண்டிருக்கிறோம்.

ஒப்புக்குப் பரஸ்பரம் நாம் அனுப்பிய
பரிசுப் பொருள் ஏன்
இன்னும் நம் கை வந்து சேரவில்லை?

கொஞ்சம் சலிப்பான புன்னகை
கொஞ்சம் மறைக்கப்பட்ட கண்ணீர்
கொஞ்சமும் வெளித் தெரியாத மன்னிப்பு
இவை தானே நம் முகவரி?

அஞ்சல்காரர் எப்போதுமே இப்படித்தான்
ஒரு எளிய மணிச்சத்தத்தின் மூலம்
படிகளில் இறங்க வைத்து விடுகிறார்
நம் மனநிலையை.

அவருக்கு நம் கையெழுத்து போதும்
வலதுகாலை சைக்கிளில் தூக்கிப் போட்டு
அடுத்த தெருவுக்கு நகர்ந்து விடுகிறார்.

எல்லா வேலைகளையும் முடிக்கும் வரை
பரிசுப் பொருளுக்குப் பொறுமையில்லை.

மேலே சுற்றப்பட்ட அந்தத் தாள்
என்ன பாவம் செய்தது?
ஒழுங்கின்றிக் கிழியும் போது
சுரீரென்று அடிவாங்கிய குழந்தையின்
கதறலை நாம் ஏன் கவனிக்கவில்லை?


நம்மைப் பார்த்துப் பல்லைக் காட்டுகிறது
பரிசுப் பொருள்...
எவ்வித சலனமுமின்றி
ஒரு பிரத்யேக அழைப்புக்காகக்
காத்திருக்கிறோம்.

●

**- மா. காளிதாஸ் -**



**- எழுகவி -**



பட்டபின் வருவது ஞானமில்லை
பாதையை மறப்பது பயணமில்லை
கெட்டதில் நல்லது பிறப்பதில்லை
கிழக்கினில் சூரியன் மறைவதில்லை.

காதல் என்றொரு பெயருமில்லை
கரிசனையால் மனம் கொள்வதில்லை
கண்டதும் வருவது அன்புமில்லை
கனிந்ததனால் அது துளிர்ப்பதில்லை.

ஆசையின் பிறப்பிடம் முதுகுமில்லை
அன்புக்கு வயசிடம் எதிர்ப்புமில்லை
தூசியைக் கண்கள் அழைப்பதில்லை
துயரங்கள் தூங்கி எழுவதில்லை.

துன்பங்கள் இல்லா வாழ்க்கையில்லை
தூக்கத்து நடையில் உவப்புமில்லை
காரத்தில் சிரிப்பும் வருவதில்லை
கவலை இல்லாமல் மனிதனில்லை.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..உங்களிடமிருந்து..



● கிடைக்கப் பெற்றேன்!

கவிஞர் எஸ். ஏ. கப்பார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வரும் வெண்ணிலா கவிதை மஞ்சரியின் 11வது இதழ் கிடைக்கப்பெற்றேன்.

வரும் வருடம் மறைந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் 100வது ஆண்டையொட்டி இரண்டு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அல்லாமா சேர் முகம்மத் இக்பால் பற்றி ஐ. ஏ. சத்தாரும் இஸ்லாமும் கவிதைகளும் பற்றி மருதூர் ஜமால்தீனும் எழுதிய கட்டுரைகளும் இடம்பிடித்துள்ளன.

பி. எம். எம். ஏ. காதர், செம்மைத் துளியான், ஜலீலா முஸம்மில், ரிம்ஸா முகம்மத், மாஹிரா அஸ்ஹர், அலெக்ஸ் பரந்தாமன், நழீம் ஹனிபா, ஹஸீனா ஆதம்பாவா, கிண்ணியா சபீனா, ஷியாம், முகம்மட் ராபி, சம்மாந்துறை மஷூறா, எம். ஏ. மாஹிறா, பைந்தமிழ்க் குமரன், முகம்மது ரியால், இமையி, மா. காளிதாஸ், பொலிகையூர் கோகிலா ஆகியோரின் கவிதைகளை இதழ் தாங்கியுள்ளது.

நான்கு கவிதைத் தொகுதிகள் பற்றிய விபரங்களும் இடம் பெற்றுள்ளன.

'நூல் வெளியீடுகளும் அதனைத் தொகுத்து வழங்குவோரும்' என்ற தலைப்பில் மூன்று பக்கங்களில் இடம்பெற்றுள்ள குறிப்பு கவனத்தைக் கவர்வது. இக்குறிப்பு பேசும் விடயங்கள் பற்றி நிறையப் பேச பலரிடம் நிச்சயமாகக் கருத்துகள் இருக்கின்றன. படித்துப் பார்த்துக் கருத்துகளைப் பகிரலாம். என்னைக் கேட்டால் நூறு பக்கங்களில் ஒரு நூலே எழுதுவேன்.

ஆசிரியருக்கு என்றும் எனது வாழ்த்துகள்!

**- பல்துறை எழுத்தாளர்**
**அஷ்ரப் சிஹாப்தீன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இதழ் பற்றிய எனது சில கருத்துக்கள்:

கவிதைகளின் தேர்வு மிகவும் சிறப்பாக உள்ளது.

கவிதைகளின் தரம் மிகவும் உயர்ந்தது.

கட்டுரைகள் மிகவும் பயனுள்ளவை மற்றும் சுவாரஸ்யமானவை.

இதழ் அனைத்து வாசகர்களையும் கவரும் வகையில் உள்ளது.

**- கவிஞர் ஷிப்லி அகமட்.**

---

● பஞ்சாபில் உதித்து பாகிஸ்தானில் மறைந்த சர்வதேசக் கவிஞர் பற்றிய விளக்கம் அருமை!

அது போலவே ஏனைய ஆக்கங்களும் அருமை!

வாழ்த்துகள்!

**- கவிதாயினி, எழுத்தாளர்**
**சபீனா ஷாபி.**

---

● வெண்ணிலா கவிதை மஞ்சரி இதழ் 11 கல்வியியலாளர்களின் அழகிய அட்டைப்படத்தைத் தாங்கி முகமலர்ச்சியுடன் எமை மீள் வாசிப்புக்காக இழுத்தெடுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரைகள் வெண்ணிலாவின் கனதியை நிலைக்க வைத்திருக்கிறது.

கவிதைகளுக்கான களத்தில் பல கவிஞர்கள் தங்களது அடையாளத்தைப் பதிவு செய்துள்ளார்கள். குறிப்பாக கவிஞர் மருதூர் ஜமால்தீன் பலரது இழிசொல்லிலிருந்து கவிஞர்களைக் காப்பாற்றிட பெரும் சிரத்தை எடுத்து கட்டுரையைத் தந்துள்ளார். அவர் உட்பட அனைவருக்கும் வாழ்த்துகள்.

**- கவிஞர், எழுத்தாளர்**
**ஏ.எம். கஸ்புள்ளா.**

---

## வெண்ணிலா

வெண்ணிலா கவிதை மஞ்சரியின் தொடர்ச்சியான வருகையும் வளர்ச்சியும் கண்டு அவ்வப்போது நல்ல பல கருத்துக்களைத் தெரிவித்துவரும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் உள்ளங்கனிந்த நன்றிகள்.

தொடர்ந்தும் தங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

மேலும் எதிர்வரும் காலாண்டிதழ்கள் எவ்வாறு அமையவேண்டுமென்றும் இதழ்களில் புதிதாகச் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றியும் எமக்கு அறியத்தாருங்கள்.

உங்களது ஆக்கங்களை அழகிய மொழி நடையுடன் எழுத்துப் பிழைகளின்றி அனுப்பிவையுங்கள்.

அடுத்து, 2024ஆம் ஆண்டுக்கான (நான்கு இதழ்கள்) சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

சந்தா விபரங்களை இவ்விதழின் 62ஆம் பக்கத்தில் பார்க்கலாம்.

*– ஆசிரியர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா விபரம்



## ஒரு வருடத்திற்கான ஆண்டுச் சந்தா

## ரூபா. 800/= மட்டுமே.

இலங்கை வங்கி **6106068** (எஸ். ஏ. அப்துல் கப்பார்) என்ற கணக்கிலக்கத்திற்கு ரூபா. **800/=** மட்டும் வைப்பிலிட்டு, அதன் பற்றுச் சீட்டின் நிழற்பிரதியை உங்களது தபால் முகவரியுடன் எமது வட்ஸ்அப் இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சலுக்கு அல்லது தபால் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தொடர்ந்து நான்கு **வெண்ணிலா** காலாண்டிதழ்கள் தபால் மூலம் உங்கள் வீடு வந்து சேரும்.

வட்ஸ்அப் : **0776968671**

மின்னஞ்சல் : vennilakavithaimanjari@gmail.com

முகவரி : ஆசிரியர் - வெண்ணிலா கவிதை மஞ்சரி,
378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03 #32314



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை மாநகரில் (அமானா வங்கி முன்பாக) ...

- நேரடியாக சகலவிதமான விமான பயண டிக்கற்களை உடனடியாக பெற்றுக் கொள்வதோடு
- Budget & Economy வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாடுகள் (India, Maldives, Thailand & Europe)
- வெளிநாடு ஒன்றிற்கு குடிபெயர்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள்
- Other Air ticketing related services
- Hajj & Umra Arangements
- Visa related Assistances
- Student Visa Guidance




IATA

Since 1986

MH Travels & Tours

*Ur Travel & Progress Companion*

No. 9, Main Street, Kalmunai. Hotline : 077 067 3062

Head Office : 323, Maccamady Road, Maruthamunai - 03. Tel : 067 222 9486

mhtravelsntours@gmail.com Tel : 067 205 9434, 075 808 9968

**Business & Tax consultation in the Heart of Kalmunai Town...**

- Tax Planning
- Income Tax
- VAT / SVAT
- NBT / ESC (old)
- CGT
- PAYE / APIT (Employer)
- Agribusiness consultation
- Audit
- Accounts Preparation
- IAS / IFRS, LKAS / SLFRS Consultancy
- Book Keeping
- Outsourcing services
- POS Solution
- Cooperate Secretarial Services


elite

Biz & Tax Consultancy

No. 10, Main Street, Kalmunai. M : 077 067 3062

Tel : 067 205 9434, info@elitetaxcon.com, www.elitetaxcon.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்.பர்மேஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் பிரதான வீதி, மருதமுனை Jesa Grafix இல் [illegible] 2024இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org